பொதுசன நூலகம்
நாவாந்துறைத் திடிப்பகம்
[illegible]

Saturday மெயில்
01 - 06
07-11-2009
பக்கங்கள்: 24
விலை: 15/=
සැටඩේ මේල්
A Fascin Bulletin



# தொடரும் வீச்சு





அரசியல் தலைவர்களை நோக்கி காலணிகளை வீசுவது மக்களின் கவனத்தை எளிதாக ஈர்க்கக்கூடிய பிரசித்தமான ஒரு போராட்ட வடிவமாக மாறிவிட்டது போலத் தோன்றுகிறது.

கடந்த வருட இறுதியில் பாக்தாத்திற்கு விஜயம் செய்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை நோக்கி ஈராக்கிய தொலைக்காட்சி சேவையான அல் பாக்தாதியாவின் செய்தியாளர் முன்டாசர் அல் செய்டி செய்தியாளர்கள் மாநாட்டில் தன்து இரு சப்பாத்துக்களையும் வீசி இந்த போராட்டப் போக்கை ஆரம்பித்து வைத்தார்.

இத்தகைய பிந்திய சம்பவம் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றிருக்கிறது. முன்னாள் அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன்ஹோவார்ட் அந்த பல்கலைக் கழகத்தில் 'புதிய நூற்றாண்டில் தலைமைத்துவம்' எனும் தலைப்பில் உரையாற்றிக்கொண்டிருந்த போது அவரது நாட்டைச் சேர்ந்த மாணவன் ஒருவன் அவரை இனவெறியன் என்று தூஷித்தபடி தனது சப்பாத்தை எறிந்தான்.

முன்னாள் பிரதமர் மீது சப்பாத்துப்படவில்லை. தனது நாட்டைச் சேர்ந்த ஒருவர் இத்தகைய பரிதாபகரமான வீச்சை செய்திருப்பது எனக்கு கவலையாக இருக்கிறது. ஏன் என்றால், சப்பாத்தை வீசியவர் எமது அணியில் இடம்பெறக் கூடிய அளவுக்கு திறமையானவர் அல்ல என்று ஹோவார்ட் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மாணவர்கள் மத்தியில் கூறினார்.

புஷ் மீதும் ஹோவார்ட் மீதும் சப்பாத்துக்கள் வீசப்பட்ட சம்பவங்களுக்கு இடையில் மேலும் பல அரசியல் தலைவர்கள் மீது காலணி வீச்சுக்கள் இடம்பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(2ஆம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள் குளிர்காய்வதற்கு 15 இலட்சம் டொலர் பண நோட்டுக்களை எரித்து தீ மூட்டிய தந்தை

கொலம்பியாவை 1980 களில் ஆட்டிப்படைத்த போதைப்பொருள் கடத்தல் மன்னன் பப்லோ எஸ்கோபாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

கொலம்பிய பொலிஸாரினதும் இராணுவத்தினதும் கண்களில் மண்ணைத் தூவிக் கொண்டு பலவருடங்களாக தலைமறைவு வாழ்க்கை நடத்திய எஸ்கோபார் இறுதியில் 1993 டிசம்பரில் அந்நாட்டில் மெடலின் நகரில் வீடொன்றில் மறைந்திருந்தபோது அமெரிக்காவின் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அவனைக் கண்டுபிடித்த பொலிஸார் அவன் தப்பியோடுகையில் சுட்டுக்கொன்றனர்.

எஸ்கோபாரின் மறைவிற்குப் பிறகு தனது குடும்பத்தினருடன் ஆர்ஜன்டீனாவுக்கு சென்று கடந்த 15 வருடங்களாக அங்கு வாழும் மகன் 'கொலம்பியன்' என்ற சஞ்சிகைக்கு இவ்வாரம் அளித்திருக்கும் பேட்டியொன்றில் தனது தந்தையின் வாழ்வு முறை பற்றிய பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

எஸ்கோபாரின் மகனின் பெயர் ஜுவான் பப்லோ எஸ்கோபார் அவர் தனது பெயரை 'செபஸ்ரியன் மறோகுயின்' என்று மாற்றியிருக்கிறார். எஸ்கோபார் செல்வாக்கின் உச்சக் கட்டத்தில் இருந்தவேளையில் உலகளாவியரீதியில் போதைப் பொருட்களை (குறிப்பாக கொக்கெயின்) கடத்தும் தலைமறைவு கட்டமைப்புகளை பெருமளவில் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தான்.

பல மாடமாளிகைகள், தனிப்பட்ட மிருகக் காட்சிச்சாலை, விமானங்கள், தனிப்பட்ட படையணி என்று சொந்தத்தில் வைத்திருந்த எஸ்கோபாரை அமெரிக்காவின் 'ஃபோர்ப்ஸ்' சஞ்சிகை 1989 இல் உலகின் தனவந்தர்கள் வரிசையில் ஏழாவது இடத்தில் வைத்தது. எஸ்கோபாரின் சொத்துகளின் பெறுமதி 1800 கோடி அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டிருந்தது. ஆயிரக் கணக்கானவர்களைக் கொலைசெய்ய உத்தரவிட்ட எஸ்கோபார் மறுபுறத்தில் சமூக சேவைகளிலும் ஈடுபட்டான். பாடசாலைகள், ஸ்ரேடியங்கள், தேவாலயங்கள் மற்றும் வறியவர்களுக்கான வீடமைப்புத்திட்டங்களை நிருமாணிக்க இலட்சக்கணக்கான டொலர்களைச் செலவிட்டான்.



பொலிஸாரால் தேடப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் ஒருதடவை கொலம்பியாவின் மலைப் பகுதிக்குள் மறைவீடொன்றில் தனது மகளுடன் எஸ்கோபார் ஒளிந்திருந்தான். கடுமையான குளிரில் மகள் (பெயர் மனுவெலா) ஹைபோதேமியா என்ற நோயினால் அவள் அவஸ்தைப்படுவதைக் கண்ட எஸ்கோபார் அவள் குளிர்காய்வதற்காக ஒரு இரவில் மாத்திரம் 15 இலட்சம் அமெரிக்க டொலர்கள் பண நோட்டுக்கட்டுகளை எரித்து தீமூட்டியதாகவும் மறைவிடத்தில் சமையல் செய்வதற்கு விறகையோ அல்லது எரிபொருளையோ கொண்டு வர இயலாத நிலையில் சுமார் 20 இலட்சம் டொலர்களை எரித்து அதையே அடுப்பாகப்பயன்படுத்தியதாகவும் மகன் பேட்டியில் இப்போது கூறியிருக்கிறார்.

எஸ்கோபாரின் குடும்பம் தங்கியிருக்கும் மறைவிடத்தை அவன் அடிக்கடி மாற்றியதாகவும் ஒரு தடவை மெடலின் நகரில் 48 மணி நேரத்திற்குள் 15 மறைவிடங்களுக்கு குடும்பம் மாறி மாறி மறைந்திருந்ததாகவும் மகன் கூறுகிறார். குடும்பத்தின் உறுப்பினர்களில் எவராவது பொலிஸாரிடம் அல்லது இராணுவத்தினரிடம் பிடிபடும் பட்சத்தில் சித்திரவதை செய்யப்படும் போது மறைவிடங்கள் பற்றிய தகவல்களை அம்பலப்படுத்திவிடுவார்கள் என்ற பயத்தில் எஸ்கோபார் குடும்பத்தவர்களை மறைவிடங்களுக்கு மாற்றும் போது அவர்களின் கண்களைக் கட்டிவிட்டே கூட்டிச்செல்வானாம்.

எஸ்கோபார் கொக்கெயின் கடத்தல் தொழிலில் இறங்குவதற்கு முன்னதாக நீண்ட காலத்துக்கு முன்னர் பயன்படுத்தப்பட்டு மக்களால் மறக்கப்பட்டுப்போன பழைய கல்லறைக்கற்களை (tombstone) மீள்பயன்பாட்டுக்காக விற்பனை செய்வதையே தொழிலாகக் கொண்டிருந்தான் என்று அவனின் சகோதரரான றொபேர்ட்டோ எஸ்கோபார் எழுதிய ('the accountants story') என்ற நூலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் லண்டனின் தெடெயிலி ரெலிகிராம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

## தொடரும்...

(முன்பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஏப்ரல் மாத ஆரம்பத்தில் புதுடில்லியில் காங்கிரஸ் கட்சியின் தலைமையகத்தில் ...பெற்ற செய்தியாளர் ...டொன்றில் இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தை நோக்கி டெய்னிக் ஜாக்ரான் என்ற இந்திப் பத்திரிகையின் செய்தியாளர் சீக்கியரான 'ஜர்னேல் சிங்' சப்பாத்தை வீசினார். சப்பாத்து சிதம்பரம் மீது படவில்லை.

இச்சம்பவத்துக்கு முன்னதாக பெப்ரவரி மாத ஆரம்பத்தில் பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சீனப் பிரதமர் வென்ஜியாபாவோ கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றிக்கொண்டிருந்தபோது அவரை நோக்கி மாணவர் ஒருவர் சப்பாத்தை வீசினார். அதுவும் சீனப் பிரதமர் மீது படவில்லை.

இதையடுத்து சுவீடனுக்கான இஸ்ரேலியத் தூதுவர் ஸ்ரொக்ஹோம் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில் அவரை நோக்கியும் சப்பாத்து வீசப்பட்டது.

கடந்த ஏப்ரலில் இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தின் குருஷேத்திராவில் தேர்தல் பிரசார ஊர்வலமொன்றில் சென்றுகொண்டிருந்த காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் நவீன் ஜிந்தால் மீது ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் ஒருவர் தனது செருப்பை வீசினார். எம்.பி.யாக இருந்த காலத்தில் ஜிந்தால் தங்களுக்கு எந்தவிதமான நல்ல சேவையையும் செய்யவில்லை என்பதனால் ஆத்திரமடைந்தே அவர் மீது செருப்பை வீசியதாக அந்த ஓய்வு பெற்ற அதிபர் கூறியிருந்தார்.

அதேகாலகட்டத்தில் மத்தியப் பிரதேச மாநிலத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றுக்கு பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் எல்.கே.அத்வானி சென்றுகொண்டிருந்தபோது அவரை நோக்கி அதேகட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் செருப்பை வீசினார்.

இச்சம்பவத்தை அடுத்து சில தினங்களில் குஜராத் மாநிலத் தலைநகர் அஹமதாபாத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த இந்தியப்பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கை நோக்கி அந்த நகரில் உள்ள பொறியியல் கல்லூரி மாணவன் ஒருவன் தனது சப்பாத்தை வீசினான். 'தலைவர்கள் வருகிறார்கள்' உரையாற்றுகிறார்கள். ஆனால் மக்களுக்கு எந்தச் சேவையும் செய்வதில்லை என்று முணு முணுத்துக் கொண்டு பிரதமரை நோக்கி சப்பாத்தை வீசிய அந்த மாணவனைப் பொலிஸார் கைது செய்தனர்.

இறுதியாக இப்போது முன்னாள் அவுஸ்திரேலியப் பிரதமரை நோக்கி கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சப்பாத்து வீசப்பட்டிருக்கிறது. இப்பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இரண்டாவது சப்பாத்து வீச்சுசம்பவம் இதுவாகும்.

அரசியல் தலைவர்களை நோக்கிகாலணி வீசப்படுகின்ற எந்தவொரு சம்பவமுமே உலகளாவிய ஊடகங்களில் பெரும் முக்கியத்துவத்தைப் பெறத்தவறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணை புறக்கணிக்கும் யாழ். மருத்துவர்கள்



வட மாகாணத்தில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் பொதுவாக கல்வித் தரங்கள் உயர்வாக இருக்கின்ற போதிலும், அங்குள்ள மக்களுக்கு அவசியமான மருத்துவ சேவைகள் பூரணமாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பது கேள்விக்குரிய விடயமாகவே இருக்கிறது.

இதற்கு அந்த மண்ணைச் சேர்ந்தவர்களே காரணமாக இருப்பதும் இந்த விவகாரத்தில் கவலைக்குரிய விடயமே. ஏனெனில், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பட்டப் படிப்பை முடித்து வெளிவரும் மருத்துவ பட்டதாரிகளில் சொற்ப அளவிலானோரைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் தங்களுக்குரிய சொந்த மண்ணை விட்டு, தெற்கில் பணிபுரிவதிலேயே ஆர்வம் காட்டுவது மட்டுமல்லாது, அதை நிறைவேற்றியும் கொள்வதாக பொதுவான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

இதை உறுதிப்படுத்துவது போல் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் அண்மையில் கருத்து வெளியிட்டிருக்கிறார். யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பட்டப்படிப்பை முடித்து வெளிவருவோரில் 95 சதவீதமானோர் தங்களது சொந்த மண்ணில் பணியாற்றுவதை விட தெற்கில் பணியாற்றுவதையே விரும்புவதாக கடந்த 2 ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன், வடக்கு கிழக்கைச் சேர்ந்த மருத்துவர்கள் தென் பகுதியில் பணிபுரிவதற்கு காட்டும் ஆர்வத்தை விடுத்து, தங்களது சொந்த மக்களுக்கு சேவை செய்ய முன்வர வேண்டுமென்றும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதன் தாற்பரியத்தை புரிந்துகொள்வது அவசியம்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆரம்பிக்கப்பட்ட இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையில், பட்டப் படிப்புகளை முடித்து அதிலிருந்து ஒவ்வொரு வருடங்களிலும் வெளியேறிய மருத்துவ பட்டதாரிகள் எத்தனை பேர் இன்று யாழ். குடாநாட்டு வைத்தியசாலைகள் உட்பட வட மாகாண வைத்தியசாலைகளில் பணிபுரிகின்றனர் என்று பார்த்தால் சராசரியாக ஒப்பீட்டளவில் மிகவும் சொற்பமாகவே இருக்கும்.

யாழ்ப்பாண வைத்தியசாலைகளில் தெற்கைச் சேர்ந்த சிங்கள வைத்தியர்கள் கூட பணிபுரிந்து வரும் நிலையில், அந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது மக்களுக்கு இந்த சேவையை ஈடுசெய்வதில் இருக்கும் சிக்கலும், சிரமமும் என்னவென்பதை பாதிக்கப்பட்டவர்களின் கேள்வியாக இருக்கிறது.

ஒரு இடத்தில் பணிபுரிய மறுக்கும் வைத்தியர்களை கட்டாயப்படுத்தி அந்த இடத்திற்கு நியமிப்பதால் மக்களுக்கு எந்த பயனும் கிட்டப் போவதில்லை. அப்படி நடந்தால் அது சம்பந்தப்பட்ட வைத்தியர்களுக்கு மட்டுமல்லாது, சிகிச்சை பெறவரும் மக்களுக்கும் அதிருப்தியாகவே அமையும். எனவே, தங்களது பகுதிகளிலுள்ள தங்களது மக்களுக்கு சேவையாற்றுவதற்கு தங்களுக்கிருக்கும் பொறுப்புகளையும் கடப்பாட்டையும் சம்பந்தப்பட்ட வைத்தியர்களே உணர்ந்து செயற்படுவதே இங்கு அவசியம்.

ஏனெனில், யாழ். மக்கள் தங்களுக்குரிய மருத்துவ சேவைகளை பூரணமாக பெற்றுக் கொள்வதற்கு எவ்வளவு கஷ்டப்படுகின்றனர் என்பதை அங்கிருந்து வைத்தியர்களாகியவர்களுக்கு சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்திய சேவையின் அவசியமும், முக்கியத்துவமும் என்னவென்பதை அவர்கள் புரிந்துகொள்ளாமல் இருந்திருக்கவும் வழியில்லை.

அண்மையில், சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் வெளியிடப்பட்டிருக்கும் தரவுகளின் அடிப்படையில், யாழ். மாவட்டத்தில் 27 வைத்தியசாலைகளும், 16 மருத்துவசாலைகளும் இருப்பதுடன், அம் மாவட்டத்தில் 235 வைத்தியர்களும் 441 தாதிமார்களும் பணிபுரிகின்றனர்.

அத்துடன், அங்கு வைத்திய நிபுணர்கள் 11 பேர் இருப்பதுடன், இவர்களில் 4 பேர் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தரவுகளை சமர்ப்பித்த சுகாதார அமைச்சர் தான், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திலிருந்து வெளிவரும் மருத்துவ பட்டதாரிகளில் 95 சதவீதமானோர் தென்பகுதியில் பணிபுரியவே ஆர்வம் காட்டுவதாகக் கூறியிருக்கிறார். எனவே, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திலிருந்து வெளிவரும் வைத்தியர்களுக்கு தங்களது மக்களுக்கு சேவை செய்யும் ஆர்வம் எவ்வளவு தூரத்திற்கு இருக்கிறது என்பதை இதுவே தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இது மட்டுமல்லாது சுகாதார அமைச்சரின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் வட மாகாணத்தில் யாழ். மாவட்டம் தவிர வவுனியா மாவட்டத்தில் 10 வைத்தியசாலைகளும் ஒரு மருத்துவசாலையும் இருக்கின்றன. மன்னார் மாவட்டத்தில் 10 வைத்தியசாலைகளும் 6 மருத்துவசாலைகளும் இருக்கின்றன.

இதேபோல், கிளிநொச்சி மாவட்டத்தில் 9 வைத்தியசாலைகளும் 4 மருத்துவசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 வைத்தியசாலைகளும், 3 மருத்துவசாலைகளும் இருப்பதாகவும் இவற்றுக்கமைய வட மாகாணத்தில் மொத்தமாக 62 வைத்தியசாலைகளும், 30 மருத்துவசாலைகளும் இருப்பதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேநேரம், யாழ். மாவட்டத்தில் 235 வைத்தியர்களும், 441 தாதிமார்களும், வவுனியா மாவட்டத்தில் 93 வைத்தியர்களும் 173 தாதிமார்களும், மன்னார் மாவட்டத்தில் 52 வைத்தியர்களும் 189 தாதிமார்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 21 வைத்தியர்களும், 54 தாதிமார்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 வைத்தியர்களும் 16 தாதிமாரும் பணிபுரிவதாகவும் அந்த அமைச்சின் புள்ளிவிபரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதற்கமைய வடமாகாணத்தில் மொத்தமாக 408 வைத்தியர்களும் 873 தாதிமார்களும் இருக்கின்றனர். அத்துடன், வைத்திய நிபுணர்களைப் பொறுத்தவரை ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போன்று யாழ். மாவட்டத்தில் 11 பேரும் வவுனியா மாவட்டத்தில் 13 பேரும், மன்னார் மாவட்டத்தில் 4 பேரும் இருக்கின்றனர். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வைத்திய நிபுணர்கள் எவரும் இல்லையென்றும் சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

இதேநேரம், வட மாகாணத்தில் சுகாதார சேவையிலுள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 5,301 என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புள்ளி விபரங்கள் எப்படியிருப்பினும் திருப்திகரமான வைத்திய சேவையே மக்களின் தேவையாக இருக்கிறது. யாழ். மக்களுக்கு இருக்கும் அந்த தேவையை பூர்த்திசெய்ய வேண்டிய பொறுப்பு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திலிருந்து பட்டப் படிப்பை முடித்து வெளியேறும் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. இது வைத்திய சேவைக்கு மட்டுமன்றி, மக்கள் நலன் சார்ந்த ஏனைய அனைத்து துறைகளுக்கும் பொருந்தும்.

**டிட்டோ குகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறி வருகிறதா யாழ்ப்பாணம்?

தமிழ் மக்கள் தங்களுடைய கலை, கலாசாரப் பண்பாடுகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் மிகவும் உறுதியான நிலைப்பாட்டை கொண்டவர்கள். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களுடைய செயற்பாடுகளுக்கு உலகிலேயே தனி மதிப்பும் மரியாதையும் உண்டு.

தமிழ் தோற்றம் பெற்றது இந்தியாவாக இருக்கின்ற போதிலும் அது இலங்கையிலேயே குறிப்பாக யாழ்ப்பாணத்திலேயே வளர்ச்சியடைந்ததாக தமிழகத்திலுள்ள அறிஞர்களே கூறியிருக்கின்றனர்.

இதற்கேற்பவே யாழ்ப்பாணத் தமிழர்களுக்கென்று விசேடமான பண்பாடு பழக்க வழக்கங்களும் பரம்பரை பரம்பரையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன.

ஆனால், யாழ்.குடாநாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற நிலைமையை அவதானிக்கின்ற பெரியவர்களும் கல்விமான்களும் யாழ்ப்பாணம் இப்படி மாறிவிட்டதா என்று வாயில் விரலை வைக்கின்றனர்.

குறிப்பாகக் கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற 'பூத்திடும் பனந்தோப்பு' என்ற இன்னிசை நிகழ்வு தொடர்பாக இப்பத்தியில் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷவைத் தலைமையாகக் கொண்ட 'இளைஞர்களுக்கான நாளை' என்ற அமைப்பினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

'இளைஞர்களுக்கான நாளை' என்ற இந்த அமைப்பானது இளைஞர்களை எதிர்காலத்தில் சிறந்த ஆற்றல் ஆளுமையுள்ளவர்களாகவும் அறிவார்ந்த செயற்பாடுகளூடாக அவர்களின் திறமைகளை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டே உருவாக்கப்பட்டது.

கடந்த 30 வருடங்களாக யுத்தத்தின் கோரத்திற்குள் அகப்பட்டு யுத்தம் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த மக்களைத் தற்போது மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்க வைப்பதன் மூலம் அவர்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி சிறந்த எதிர்காலம் தொடர்பாகச் சிந்திக்கக் கூடியவர்களாக மாற்றுவதற்காகவே இது போன்ற நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது.

'பூத்திடும் பனந்தோப்பிற்கு' முன்னரும் இவ்வாறான சில இசை நிகழ்வுகள் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப்பட்டிருக்கின்றன.

ஆனால், முன்னையவைகளை விட அண்மையில் நடைபெற்ற 'பூத்திடும் பனந்தோப்பிற்கு' பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். தற்போது பெரியவர்களையும் இளைஞர், யுவதிகளையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் தென்னிந்தியத் திரைப்படத்துடன் தொடர்புடைய நட்சத்திரங்களும் தென்னிலங்கைக் கலைஞர்களும் கலந்துகொண்டமையே இந்த நிகழ்விற்கு மக்கள் அதிகளவாகத் திரளக் காரணமாக அமைந்தது.

இந்த நிகழ்வு மாலை 6 மணிக்கு ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 6.40 மணியளவிலேயே ஆரம்பமாகியது. ஆனால், நேரத்துடனேயே மக்கள் அங்கு குழுமத் தொடங்கினர்.

தொடக்க நிகழ்வின் போது அரசியல் பிரமுகர்களும் இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்ததால் துரையப்பா விளையாட்டரங்கைச் சுற்றிலும் பாதுகாப்பு இறுக்கமாக்கப்பட்டிருந்தது. நிகழ்வினைப் பார்வையிடுவதற்காக விளையாட்டரங்கினுள் சென்றோர் சோதனையிடப்பட்டே அனுமதிக்கப்பட்டனர்.

அரங்கினுள் செல்வதற்காக வாயிலில் ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியதால் படையினராலும் பொலிஸாராலும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த நெருக்கடி நிலைமைகளால் அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தவர்களால் இளைஞர்கள் பலர் தாக்கப்பட்டனர். நிகழ்வைப் படமெடுக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் சிலரும் நெரிசலின் போது தாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆயினும், 'எதை இழந்தாலும் இதை இழக்கமாட்டோம்' என்ற நிலையில் அரங்கினுள் சென்று இசை நிகழ்வைப் பார்க்க வேண்டுமென்பதற்காக மேலும் மேலும் மக்கள் அங்கே திரண்டனர்.

சோதனைகள் முடிவடைந்து ஒடுக்கமான நுழைவாயிலூடாகத் திரளாக உள்ளே சென்ற போது பல பெண்களும் குழந்தைகளும் மூச்சுத் திணறலுக்கு உள்ளாகியதையும் ஒருசிலர் மயங்கி வீழ்ந்ததையும் காணக் கூடியதாக இருந்ததோடு, அந்த வாயிலில் அறுந்த நிலையில் ஏராளமான காலணிகள் சிதறிக்கிடந்ததையும் அவதானிக்க முடிந்தது.

முன்னதாக உள்ளே சென்ற பல நூற்றுக்கணக்கான மக்கள் அரங்கின் கட்டுமான இருப்பிடங்களில் அமர்ந்திருந்து இசை நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த அதே வேளை, பல ஆயிரக்கணக்கான மக்கள் மைதானத்தில் நின்ற வண்ணமே நிகழ்வைக் கண்டு களித்தனர்'.

யாழ்.குடாநாட்டுக்கான ரயில் போக்குவரத்துகள் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நிறுத்தப்பட்ட நிலையில் அதனை மீண்டும் செயற்படுத்துவதற்கான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

குடாநாட்டுக்கு ரயில் வருவது உண்மையோ என்னவோ இளைஞர்களின் ரயில் அன்று துரையப்பா விளையாட்டரங்கில் தாறுமாறாகவே அலைந்தது.

அதாவது தங்கள் மேலாடைகளைக் கழற்றி இடுப்பில் கட்டியவாறு முன்புறமாக அணிய வேண்டிய தொப்பிகளைப் பின்புறமாக அணிந்து கொண்டு ஒவ்வொருவரின் தோள்களிலும் மற்றையவர்கள் கைகளைப் பிடித்தவாறு ஏறக்குறைய 6 தொடக்கம் 10 பேர் கொண்ட ஒவ்வொரு குழுவாக மக்களை நெரித்துக்கொண்டே இளைஞர்களின் ரயில் அங்குமிங்கும் ஓடியது.

இந்த ரயில்களால் 'நசிபடுகின்ற' பெண்கள் உட்படப் பொதுமக்கள் ஏதாவது கூறினால் அவர்களுடன் முரண்பட்டுக்கொண்டே மக்கள் குழுமி நின்ற இடங்களை நுழைத்துக் கொண்டு இந்த ரயில் பயணித்தது. மற்றைய சில இளைஞர் குழுக்கள் பாடலுக்கு ஏற்ப ஆட்டம் போட்டனர்.

இவ்வாறு ரயில் ஓடிய, ஆட்டம் போட்ட இளைஞர்களை இயக்கியது 'மதுபானம்' என்பதையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

நிகழ்வு நடைபெற்ற அன்றைய தினம் இரவு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்த போதிலும் நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டே இருந்தன. ஆனால், மதுபான நிலையங்கள் திறந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. இது இளைஞர்களுக்கு வாய்ப்பாக அமைந்தது.

இந்த இளைஞர்களின் செயல்கள் அரங்கினுள்ளே சில இடங்களிலும் சுற்றுப் புறங்களிலும் எல்லை மீறிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நிகழ்வைப் பார்ப்பதற்காக வருகை தந்த இளம் பெண்களுடன் இவர்கள் 'அங்க சேஷ்டைகளிலும்' ஈடுபட்டிருக்கின்றனர். இதன் ஒரு கட்டமாக இளம் பெண்ணொருவரின் 'மேலாடை' கிழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறான அங்க சேஷ்டைகளில் ஈடுபட்ட சில ஆண்களுக்கு யாழ்ப்பாணப் பெண்கள் தங்களின் வீரத்தையும் காண்பித்திருக்கின்றனர். அதாவது தங்களுடன் தவறாக நடக்க முயன்ற சில இளைஞர்களுக்குப் பெண்கள் சிலர் 'சக்கை போடு' போட்டிருக்கின்றனர்.

இன்னிசை நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்த போதும் முடிவடைந்து திரும்பிச் செல்லும் போதும் நகரில் பூட்டப்பட்ட நிலையிலிருந்த வர்த்தக நிலையங்களுக்குள்ளும் இளைஞர்கள் தங்கள் சாகசங்களைக் காட்டியிருக்கின்றனர்.

அதாவது தாங்கள் அருந்திய மதுப் போத்தல்களை உடைத்து வர்த்தக நிலையங்களின் துவாரங்களூடாக உள்ளே வீசியெறிந்துவிட்டுச் சென்றுள்ளனர்.



அன்றைய தினம் நடைபெற்ற இந்தச் செயற்பாடுகளை அவதானித்த கல்விமான்களும் சமூக ஆர்வலர்களும் இந்த இளைஞர்கள் தொடர்பாகத் தமது வெறுப்பையும் கவலையையும் வெளியிட்டுள்ளனர்.

பொது நிகழ்வுகளில் இளைஞர்கள் தமது மகிழ்ச்சியை வெளிக்காட்டுவது இயல்பென்ற போதிலும் அவர்களின் எல்லை மீறிய செயற்பாடுகள் ஏற்றுக் கொள்ளத்தக்கவை அல்ல என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யுத்தம் முடிவடைந்துள்ள தற்போதைய நிலையில் நாட்டின் அபிவிருத்தி தொடர்பாகவும் தங்களின் எதிர்காலம் தொடர்பாகவும் சிந்திக்க வேண்டிய இளைஞர்கள் இத்தகைய 'கீழ்த்தரமான' செயல்களில் ஈடுபடுவது ஏற்புடையதல்ல என்பதே அவர்களின் கருத்தாக இருக்கின்றது.

இதுவரை கட்டிக் காக்கப்பட்டு வந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் பண்பாட்டுக் கலாசாரத்தைச் சீரழிக்கும் வகையில் இளைஞர்கள் செயற்படுவதை நிறுத்தி ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் அவர்கள் தம்மை ஈடுபடுத்த வேண்டுமென்றே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலையான மனநிலை ஞாபக சக்தியை அதிகரிக்கும்



கவலையான மனநிலையுடனோ அல்லது மனக்கசப்புடனோ இருப்பதற்கு உங்களில் எவராவது விரும்புவீர்களா? இல்லை. எப்போதுமே மகிழ்ச்சியான மனநிலையுடன் இருப்பதற்கே பிரியப்படுவோம்.

ஆனால், கவலையான மனநிலை (Bad Mood) எங்களுக்கு நல்லதாம். அவ்வாறு இருப்பவர்கள் பிறரால் எளிதில் ஏமாற்றப்படக் கூடியவர்களாக இருக்கமாட்டார்களாம். அத்துடன், அவர்கள் ஏனையவர்களை மதிப்பீடு செய்வதில் உள்ள ஆற்றலை வளர்த்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் ஞாபகசக்தியை மேம்படுத்தக் கூடியவர்களாகவும் இருப்பார்கள் என்று அவுஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

நியூசவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் உளவியல் துறைப் பேராசிரியர் ஜோசப் ஃபோர்காஸினால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள் அவுஸ்திரேலியன் சயன்ஸ் ஜேர்ணலின் நவம்பர் / டிசம்பர் இதழில் வெளியாகியிருக்கின்றன.

மகிழ்ச்சியாக (*Positive mood*) இருக்கின்றவர்களை விட கவலையான மனநிலையில் இருப்பவர்கள் கூடுதலான அளவுக்கு தங்களது சூழலைப் பற்றி நன்கு அறிந்தவர்களாக எதையுமே உன்னிப்பாக அவதானிக்கும் இயல்பு கொண்டவர்களாக மதிப்பீட்டாற்றல் உள்ளவர்களாக இருப்பார்கள் என்று அந்த ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

'துயரமான மனநிலை எம்மைச் சுற்றியிருக்கும் நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு ஏற்ப தகவல்களைச் சிறந்த முறையில் ஆய்ந்துணரும் ஆற்றலை எமக்கு வளர்க்கிறது. மகிழ்ச்சியானதும் நேர்மறையானதுமான மனநிலை ஆக்கத்திறனையும் நெகிழ்வுத் தன்மையையும் ஒத்துழைப்பு உணர்வையும் மேம்படுத்துகிறது. அத்துடன், மகிழ்ச்சியான மனநிலை குறுக்கு மூளையில் கூடுதல் நம்பிக்கை வைக்கவும் எம்மைத் தூண்டுகிறது. ஆனால், எதிர்மறையானதும் துயரமானதுமான மனநிலை வெளியுலகின் மீது கூடுதல் கவனத்தைச் செலுத்தவும் மிகவும் நிதானமாகச் சிந்திக்கவும் எதையுமே கூடுதலான அளவுக்கு நுட்பமாக ஆராய்ந்து முடிவெடுக்கும் திறனை வளர்க்கவும் உதவுகிறது' என்று பேராசிரியர் ஃபோர்காஸ் கூறியிருக்கிறார்.

இந்த ஆய்வுக்காக பேராசிரியர் ஃபோர்காஸும் அவரது குழுவினரும் பல பரிசோதனைகளை நடத்தினார்கள். ஆய்வில் பயன்படுத்தப்பட்டவர்களைத் திரைப்படங்களைப் பார்க்கச் செய்தும் துயரமான அல்லது மகிழ்ச்சியான முன்னைய நிகழ்வுகளை நினைவு மீட்டிப் பார்க்கச் செய்தும் கவலையான மனநிலையையும் மகிழ்ச்சியான மனநிலையையும் வரவழைத்து இந்தப் பரிசோதனைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

ஒரு பரிசோதனையின் போது மகிழ்ச்சி மனநிலையில் இருந்தவர்களிடமும் கவலையான மனநிலையில் இருந்தவர்களிடமும் நகரப்புற வாழ்வில் இருக்கக் கூடிய மாயைகள் மற்றும் வதந்திகளைப் பற்றிய அனுமானங்களைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டது. துயரமான மனநிலையில் இருப்பவர்கள் வெறுமனே மற்றவர்களினால் கூறப்படுகின்றவற்றை எளிதில் நம்புவது சாத்தியமில்லை என்று அப்பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

கவலையான மனநிலையில் இருப்பவர்கள் இனரீதியான, மதரீதியான தப்பெண்ணங்களின் அடிப்படையில் திடீர் முடிவுகளை எடுப்பது பெருமளவுக்குச் சாத்தியமில்லை. அத்துடன், அவர்கள் நேரில் கண்ட முன்னைய சம்பவமொன்றை நினைவு மீட்குமாறு கேட்கப்பட்ட போது அவர்கள் பிழைவிடக் கூடிய சாத்தியமும் வெகுவாகக் குறைவு.

கவலையான மனநிலையில் இருப்பவர்கள் தங்களது பிரச்சினைகளை எழுத்து மூலமாக விளக்கிக் கூறுவதை மிகவும் சிறப்பாகச் செய்வார்கள். ஓரளவு எதிர்மறையான மனநிலை ஆட்களை அனுசரிக்கப் போகும் சுபாவத்தை வளர்க்கும் தன்மையுடையது. தொடர்பாடலைப் பொறுத்தவரை சிறப்பான பாணியை வளர்த்துக் கொள்ளவும் அது உதவுகிறது.

நேர்மறையான- மகிழ்ச்சியான மனநிலை முற்று முழுதாக விரும்பத்தக்கதல்ல. ஒரு விவகாரத்தை அனுமானித்துத் தீர்மானமொன்றை எடுப்பதில் தவறு இழைக்கக் கூடிய சாத்தியத்தை மிகவும் குறைவாகவே கவலையான மனநிலையில் உள்ளவர்கள் கொண்டிருக்கிறார்கள். இத்தகையவர்கள் ஏதாவது ஒரு சம்பவத்தை நேரில் கண்டவர்கள் திரித்துக் கூறும் போது கடுமையாக எதிர்ப்பை வெளிக்காட்டுவார்கள். கவலையான மனநிலையுடையவர்கள் மற்றவர்களை தங்கள் வழிக்குக் கொண்டு வருவதிலும் மிகவும் பயனுறுதியுடைய வழிவகைகளைப் பின்பற்றுவார்கள் என்று அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரலை மாற்றும் வசதி செல்போன்களினால் ஆபத்து



தொழில்நுட்ப வளர்ச்சி வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அது ஏற்படுத்தும் பாதிப்புகள் அச்சுறுத்துபவையாக இருக்கின்றன.

தகவல் தொடர்புக்கான கண்டு பிடிப்புகளில் பெரிய சாதனையாகக் கருதப்படும் தொலைபேசியின் வழித்தோன்றலான செல்பேசி இன்று அனைவருக்கும் அத்தியாவசியமான ஒன்றாகிவிட்டது. நம்மில் கணிசமானோரிடம் ஒன்றுக்கும் மேற்பட்ட செல்பேசிகள் உண்டு.

கையடக்க செல்பேசிகளை விதவிதமான வடிவங்களில் நவீன வசதிகளுடன் அறிமுகம் செய்வதில் தனியார் நிறுவனங்களிடையே கடும் போட்டி நிலவுகிறது.

இதன் விளைவாக டோர்ச் லைட்டில் தொடங்கி கமெரா, வீடியோ என்று ஒவ்வொரு நாளும் புதுப் புது வசதிகள் செல்பேசிகளில் கூடிக்கொண்டே போகின்றன.

இந்நிலையில், சீன நாட்டுத் தயாரிப்பு செல்பேசிகளில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 'வாய்ஸ் சேஞ்சர்' என்ற வசதி பலரின் தூக்கத்தைக் கெடுப்பதாக மாறியிருக்கிறது. சில முக்கிய நிறுவனங்களின் தயாரிப்புகளிலும் இந்த வசதி தற்போது வரத் தொடங்கிவிட்டது.

அதாவது, இந்த வசதியுள்ள செல்பேசிகளில் 'வாய்ஸ் சேஞ்சர்' பகுதியில் முதியவர், நடுத்தர வயது ஆண், இளைஞர், குழந்தை, இளம்பெண், நடுத்தர வயதுப் பெண், மூதாட்டி என்று 7 வகையான குரல் பிரிவுகள் இருக்கும்.

இதில், ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு நாம் பேச விரும்பும் நபரைத் தொடர்பு கொண்டால் எதிர் முனையில் இருப்பவருக்கு நம்முடைய குரல் நம் குரலாக ஒலிக்காது; மாறாக நாம் தேர்ந்தெடுத்த முதியவர் குரலோ பெண் குரலோ ஒலிக்கும் மிகவும் தத்ரூபமாக.

பொழுதுபோக்குக்காக நண்பர்களுடன் அரட்டையடிப்பதற்காக இந்தத் தொழில்நுட்ப வசதியை செல்பேசி நிறுவனங்கள் வழங்கினாலும் சிலர் தவறான வழியில் இந்த வசதியைப் பயன்படுத்துவதும் அதிகரித்து வருகிறது.

உதாரணமாக நாம் இளம்பெண் குரலைத் தேர்ந்தெடுத்துப் பேசினால் எதிர்முனையில் இருப்பவர் தன்னிடம் பேசுவது இளம்பெண் என்றுதான் நினைத்துக்கொள்வார்.

இந்த வசதியைத் தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவு எத்தனை மோசமானதாக இருக்கும் என்பதற்கு அண்மையில் தமிழ்நாட்டின் மதுரையில் நிகழ்ந்த பொறியியலாளர் முத்துவிஜயன் கொலைச் சம்பவம் ஓர் உதாரணம்.

மதுரை அனுப்பானடியைச் சேர்ந்த முத்துவிஜயனிடம் (24) செல்பேசியில் பேசிய ஒருவர் தனது பெயர் பிரியா என்று அறிமுகப்படுத்திக் கொண்டு பேசத் தொடங்கியுள்ளார். முத்துவிஜயனும் அவரை நம்ப நாளடைவில் இருவரும் அடிக்கடி பேசத் தொடங்கியிருக்கின்றனர். அனைத்து விடயங்களைப் பற்றியும் மனம்விட்டுப் பேசியுள்ளனர். பிரியா தனக்குப் பணம் தேவைப்படும் போதெல்லாம் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி முத்துவிஜயனிடம் இருந்து பணம் பெற்றிருக்கிறார்.

ஒருநாள் முத்துவிஜயனுக்கு உண்மை தெரியவந்தது. பிரியா என்ற பெயரில் 'வாய்ஸ் சேஞ்சர்' வசதியைப் பயன்படுத்தி தன்னிடம் பேசியது ஓர் ஆண் என்று. இருவருக்கும் இடையே பிரச்சினை வெடித்தது. முத்துவிஜயன் கொல்லப்பட்டார். பெரும் சிரமத்துக்குப் பிறகு எதிரிகளைப் பொலிஸார் கைது செய்தனர்.

முத்துவிஜயன் ஓர் உதாரணம்தான். வெளியே தெரியாமல் எத்தனையோ 'வாய்ஸ் சேஞ்சர்' மோசடிகள் பல இடங்களில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அவமானத்துக்குப் பயந்து இந்த மோசடிகள் அவரவருக்குள்ளேயே புதைந்து கிடக்கின்றன. பொதுவாக, தான் ஏமாற்றப்பட்டோம் என்பதைப் பலர் தனக்குள் கூட சொல்லிக் கொள்ள விரும்புவதில்லை.

ஆதலால் இத்தகைய பிரச்சினைகள் சமயத்தில் ஒருவரின் மனநலனையே பாதிக்கக்கூடும் என்கின்றனர் மனநல நிபுணர்கள்.

ஆனால், உளவியல் அடிப்படையிலும் குற்றச் செயல்கள் அடிப்படையிலும் மிக மோசமான பாதிப்புகளை உருவாக்கும் இத்தகைய தொழில்நுட்ப வசதியைக் கட்டுப்படுத்த நம்முடைய சட்டத்தில் இடமில்லை என்பது வருத்தத்துக்குரிய விடயம்.

இது குறித்து காவல் துறையினர் கூறியது; 'செல்பேசியில் குரலை மாற்றிப் பேசி மோசடியில் ஈடுபடும் நபர்கள் பற்றிப் புகார்கள் வந்தால் மட்டுமே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். மற்றப்படி தொழில்நுட்ப வளர்ச்சியைக் கட்டுப்படுத்த எங்களுக்கு அதிகாரமில்லை' என்கின்றனர்.

பிரச்சினைக்குரிய இத்தகைய தொழில்நுட்ப வசதிகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுப்பது அவசியம். அதேபோல, தொழில்நுட்ப வசதிகளை அறிமுகப்படுத்தும் நிறுவனங்களுக்கும் இதுபோன்ற வசதிகளைக் கொண்ட செல்பேசிகள் வைத்திருப்பவர்களுக்கும் சுயகட்டுப்பாடு அவசியம்.

# பெண்ணைத் திருப்திப்படுத்த வழியே இல்லை!

விடுமுறையில் சுற்றுலா சென்ற இளம் பெண்கள் குழுவொன்று ஒரு நகரில் 'பெண்களுக்கு மாத்திரம்' என்ற அறிவிப்பு பலகை தொங்கவிடப்பட்டிருந்த 5 மாடி ஹோட்டலொன்றைக் கண்டது.

சுற்றுலாவில் அந்தப் பெண்களுடன் காதலர்களோ அல்லது கணவன்மாரோ வரவில்லையென்பதால் அந்த ஹோட்டலுக்குள் சென்று பார்க்க அவர்கள் தீர்மானித்தார்கள்.

வாசலில் அழகான இளைஞன் ஒருவனை பாதுகாப்பு உத்தியோகத்தராக ஹோட்டல் நிர்வாகம் நியமித்திருந்தது. அவனுடன் பேச்சுக் கொடுத்த பெண்களுக்கு அவன் ஹோட்டல் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்கிக் கூறினான்.

இங்கு 5 மாடிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாடியாக நீங்கள் போக வேண்டும். எதைத் தேடி நீங்கள் போகிறீர்களோ அதைக் கண்டதும் அந்த மாடியிலேயே தங்கிவிட வேண்டும். ஒவ்வொரு மாடியிலும் உள்ளே என்ன இருக்கிறது என்பதை தெரிவிக்கும் அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டிருப்பதால் உங்களுக்கும் சிரமம் எதுவுமில்லை என்று பாதுகாப்பு உத்தியோகத்தரான இளைஞன் சொன்னான்.

இதையடுத்து சகல பெண்களும் முதல் மாடிக்கு சென்றார்கள். அங்கு வாசலில் காணப்பட்ட அறிவிப்புப் பலகையில் 'இந்த மாடியில் உள்ள சகல ஆண்களும் கட்டையானவர்கள். இதேவேளை, எளிமையானவர்கள்' என்று எழுதப்பட்டிருந்தது.

அதைப் பார்த்துச் சிரித்த பெண்கள் இரண்டாவது மாடிக்குச் சென்றார்கள். அங்கிருந்த அறிவிப்புப் பலகையில் 'இந்த மாடியில் சகல ஆண்களும் கட்டையானவர்கள். அதேவேளை, அழகானவர்கள்' என்று எழுதப்பட்டிருந்தது.

அதைப்பார்த்துச் சிரித்துவிட்டு அந்தப் பெண்கள் அனைவரும் மூன்றாம் மாடிக்குப் போனார்கள். அங்கிருந்த அறிவிப்புப் பலகையில் 'இந்த மாடியில் சகல ஆண்களும் உயரமானவர்கள். அதேவேளை, எளிமையானவர்கள் என்று எழுதப்பட்டிருந்தது.

அதிலும் திருப்தியடையாத பெண்கள் நான்காவது மாடிக்குச் சென்றார்கள் 'இந்த மாடியில் சகல ஆண்களும் உயரமானவர்கள். அதேவேளை, அழகானவர்களும் கூட' என்று அங்கிருந்த அறிவிப்புப் பலகையில் வாசகம் காணப்பட்டது.

நான்காவது மாடி பற்றி சகல பெண்களும் திருப்தியடைந்தபோதிலும் ஐந்தாவது மாடியும் இருப்பதால் அதையும் போய் என்னதான் இருக்கிறது என்று பார்த்துவிடுவோமே என்று அவர்கள் ஐந்தாவது மாடிக்குச் சென்றார்கள். அங்கிருந்த அறிவிப்புப் பலகையில் 'இந்த மாடியில் ஆண்களே இல்லை. ஒரு பெண்ணை திருப்திப்படுத்தவோ சந்தோஷப்படுத்தவோ வழியே இல்லை என்பதை நிரூபிப்பதற்காகவே இந்த மாடி கட்டப்பட்டது' என்று எழுதப்பட்டிருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தள விளம்பரங்கள் உருவானது எப்படி?

இணையத்தளத்தில் உலகின் முதல் பதாகை விளம்பரம் வெளியாகி 15 வருடங்களாகி விட்டன.

1994 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் திகதி hotwired.com என்ற இணையத்தளத்தில் வெளியான பதாகை விளம்பரமே உலகின் முதல் டிஜிற்றல் விளம்பரமாகும்.

எஹாட்வைர்ட் இணையத்தளம் ஒரு டிஜிற்றல் வர்த்தக இணையத்தளமாகும். இதுவே உலகின் முதல் டிஜிற்றல் வர்த்தக இணையத்தளமும் கூட. வைர்ட் இதழின் இணையத்தளப் பதிப்பும் ஆகும்.

டிஜிற்றல் விளம்பரம் குறித்து பி அன்ட் ஜி நிறுவனத்தின் தலைவரான எட் அர்ட்ஸ்ட் 1994 ஆம் ஆண்டு மே மாதம் முதல் முறையாக விழிப்புணர்வுப் பேச்சை நிகழ்த்தினார். டிஜிற்றல் விளம்பரமே இனி வர்த்தக உலகின் புதிய எதிர்காலமாக இருக்கும். அதற்கு அனைவரும் மாற வேண்டும். இல்லாவிட்டால் தனிமைப்படுத்தப்படுவோம் என்று அவர் கூறினார்.

அவரது பேச்சைக் கேட்ட மெஸ்னர் வெட்ரே பெர்ஜர் மெக்நாமி ஸ்மாட்டரர் நிறுவனத்தின் தலைவரான பொப் ஸ்மிட்டரருக்கு புதிய உற்சாகம் பிறந்தது. இதையடுத்து ஒரு விளம்பரத்தை உருவாக்கும் பணியை முடுக்கிவிட்டார் பொப்.

இணையத்தளத்தில் விளம்பரம் என்பது அப்போது புதித் என்பதால் சும்மா போட்டுப் பார்ப்போம் என்ற எண்ணமே அப்போது பொப் மற்றும் அவரது குழுவினரிடம் இருந்தது.

பின்னர் ஏதாவது ஒரு நிறுவனத்தின் பெயரை இதில் பயன்படுத்தினால் என்ன என்ற எண்ணம் தோன்றவே சிலரை அணுகினர். அதன்படி தொலைத் தொடர்பு நிறுவனமான எம்.சி.ஐ., வோல்வோ நிறுவனம், கிளப்மெட், 1-800 கலெக்ட், ஏடி அன்ட் டி, ஜிமா ஆகியவை விளம்பரம் தர முன்வந்தன.

இந்த ஆறு நிறுவனங்களின் பெயர்களையும் வைத்துப் பதாகை விளம்பரம் தயாரிக்கப்பட்டது. அப்போது இருந்த வெப் பிரவுசர் மொசைக் (பின்னர் நெஸ்ட்கேப் எக்ஸ்புளோரர் வந்து மொசைக்கை விரட்டி விட்டது).

மேலும், இப்போது போல பிராட்பேண்ட் டும் கிடையாது. டயல் அப் மட்டுமே. அதிகபட்ச வேகமே 24.4 கே.பி.பி.எஸ். தான். அமெரிக்காவில் இணையத்தளம் வைத்திருந்தவர்கள் எண்ணிக்கை அப்போது 20 இலட்சம்தான்.




இந்தப் பதாகை விளம்பரங்களுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. எனவே, சோதனை ரீதியாக வெளியிடப்பட்ட இந்த விளம்பரங்கள் உலகின் முதல் டிஜிற்றல் விளம்பரம் ஒரு வழியாக வெற்றி பெற்றது. பின்னர் நடந்தது வரலாறு.

வோல்வோ நிறுவனம் இந்த விளம்பர வெற்றியால் மகிழ்ச்சி அடைந்தது. இருப்பினும் விளம்பரத்தை கிளிக் செய்து வாடிக்கையாளர்கள் தங்களை அணுகுவதை அது விரும்பவில்லை.

அதற்கு சுவாரஷ்யமான காரணம் இருந்தது. முதலில் ஒன்லைன் மூலம் தங்களை அணுகும் வாடிக்கையாளர்களை எப்படிக் கையாளுவது என்பது குறித்து அதற்குத் தெரியாமல் இருந்தது.

2 ஆவது சட்ட ரீதியான பிரச்சினைகள் வந்து விடுமோ என்ற குழப்பம் ஒரு பக்கம். இதனால், விளம்பரத்தை கிளிக் செய்து பார்க்கும்படியாக அதை வைக்க வேண்டாம் என்று அறிவுறுத்தியது வோல்வோ.

எனவே, வோல்வோ நிறுவனத்தின் லோகோ மற்றும் ஒரு வாகனத்தின் படம் மட்டுமே அந்த விளம்பரத்தில் இடம் பெற்றதாம்.

இருப்பினும், அப்படியே விட்டால் நல்லதாக இருக்காது என்று எண்ணிய பொப் குழுவினர் வோல்வோ பதாகையை கிளிக் செய்து உள்ளே போன பின்னர் ஒரு கொஸ்டினர் வருவது போல வடிவமைத்திருந்தனர். அதில் உங்களுக்கு எந்த வோல்வோ கார் பிடிக்கும் என்ற கேள்வியைக் கேட்டிருந்தனர்.

இப்படி விளையாட்டுப் போல ஆரம்பிக்கப்பட்ட டிஜிற்றல் விளம்பரம் இன்று எப்படி உள்ளது? இன்றைய டிஜிற்றல் விளம்பர வர்த்தகத்தின் மதிப்பு 24 பில்லியன் டொலர்களாம்.

# 30 வருடங்களாக புதைக்கப்படாத உடல்



சவுதி அரேபியாவில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியில் 1979 ஆம் ஆண்டு தாதியாக பணியாற்றி வந்தவர் ஹெலன் ஸ்மித். இவர் கட்டிடம் ஒன்றிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்தார். அப்போது அவரது வயது 23. ஆனால், சாவில் சந்தேகம் இருப்பதாக அவருடைய தந்தை ரான்ஸ்மித் புகார் செய்தார்.

ஹெலன் ஸ்மித் பெண்ணைக் கப்பல் கப்டன் ஒருவர் அளித்த விருந்தில் கலந்து கொண்டதாகவும் அப்போது அவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொல்லப்பட்டதாகவும் புகார் கூறினார். எனவே அவர் மீது விசாரணை நடத்த வேண்டும் என வற்புறுத்தி வந்தார். இதனால் ஹெலன் உடல் அடக்கம் செய்யப்படாமலே 30 ஆண்டுகளாக சவுதி அரேபியா ஆஸ்பத்திரி பிண அறையிலேயே வைக்கப்பட்டிருந்தது.

மகளது உடலை அடக்கம் செய்யும்படி தந்தையிடம் சொன்னதற்கு அதை ஏற்க மறுத்துவிட்டார்.

இப்போது தந்தை ரான் ஸ்மித்துக்கு 83 வயதாகிவிட்டது. உடல் நலமும் குன்றிவிட்டது. இதையடுத்து அவர் தனது பிடிவாதத்தைக் கைவிட்டு மகள் உடலைப் பெற்று அடக்கம் செய்ய முன் வந்துள்ளார். இதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏரிஸ் 1–X விண்கப்பலை நாசா வெற்றிகரமாக சோதித்தது

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தால் வடிவமைக்கப்பட்டுள்ள உலகிலேயே மிக உயரமான ஏரிஸ் 1-X என்ற விண்கப்பலின் (ராக்கெட்டின்) சோதனை வெற்றிகரமாக நடந்தது.


இந்த விண்கப்பல் தற்போது விண்ணுக்குச் செலுத்தப்பட்டுவரும் விண்ணோடங்களுக்குப் பதிலாக அடுத்த பத்தாண்டுகளில் மனிதர்களை விண்ணுக்குக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிலவுக்குச் செல்வதற்காக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தால் உலகிலேயே மிக உயரமான விண்கப்பல் 450 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ரொக்கெட் 100 மீற்றர் உயரம் உடையது. அதிர்வுகள்,வெப்ப நிலை,அழுத்தம் ஆகியவற்றைக் கணிப்பதற்காக 700 க்கும் மேற்பட்ட சென்சார் கருவிகள் இதில் உள்ளன.

இந்த விண்கப்பலின் பரிசோதனை ஓட்டத்திற்கான ஏற்பாடுகள் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி ஏவுதளத்தில் சென்றவாரம் மேற்கொள்ளப்பட்டன. வானிலை மோசமாக இருந்ததால் ரொக்கெட் சோதனை 3 மணிநேரம் தாமதமானது. பின்னர் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டு பரிசோதனை நடத்தப்பட்டது.

இந்தப் பரிசோதனை ஓட்டம் இரண்டு நிமிடங்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. இந்த இரு நிமிட நேரத்தில் இது கிட்டத்தட்ட 40 கி.மீ. உயரத்துக்கு வானில் சென்றது. ரொக்கெட் ஏவப்பட்ட இரண்டு நிமிடங்களில் பரசூட் மூலம் அத்திலாந்திக் கடலில் இறக்கப்பட்டது. பின்னர் திட்டமிட்டபடி கப்பல் மூலம் மீட்கப்பட்டது. ஆனாலும், இது கடலில் இறங்கும் போது பரசூட்டில் ஏற்பட்ட ஒரு கோளாறின் காரணமாக விண்கப்பலின் பூஸ்டர் பழுதடைந்துள்ளதாக நாசா வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## அதிபுத்திசாலி 'எலி'

மருத்துவ விஞ்ஞானத்தில் தற்போது இரு துறைகள் முன்னிலை வகிக்கின்றன. அவற்றில் ஒன்று எல்லாவித வியாதிகளுக்கும் தீர்வுகாணும் திறன் கொண்ட ஸ்டெம் செல் சிகிச்சை முறை, மற்றொன்று வியாதியின் அடிப்படையைக் கண்டுபிடித்து அந்த நோய் மனித பரம்பரையிலேயே இல்லாமல் செய்யும் ஜெனிடிக் முறை.

மரபணு மாற்று முறையில் ஜீன்களில் செயற்கைத் தன்மையை புகுத்தி பல வியாதிகளுக்கு தீர்வு காணும் முயற்சிகள் நடந்து வருகின்றன. தற்போது சீன விஞ்ஞானிகள் எலிக்கு ஜீன் மாற்றம் செய்து சில சிறப்பு பண்புகளை உருவாக்கி உள்ளனர்.

என்.ஆர்.2பி. எனப்படும் ஒரு வகை ஜீன்களில் மாற்றங்களை ஏற்படுத்தி இந்த எலி உருவாக்கப்பட்டு உள்ளது. இதனால் மூளை செல்களான நியூரான்களுக்கு இடையேயான தொடர்பு அதிவேகமாக உயர்ந்துள்ளது.

இந்த ஜீன்களின் வேகத்தை அல்ஜீமர் வியாதி பாதிப்பது தெரியவந்தது. அதற்கான மருந்தை செலுத்துவதன் மூலம் இந்த ஜீன்களின் வேகத்தை அதிகப்படுத்த முடியும். இதனால் அதன் நினைவுத்திறன் மற்றும் செயல்படும் வேகம் அதிகரிக்கிறது. மருந்தின் அளவு அதிகப்படுவதற்கு ஏற்ப எலியின் செயல்படு வேகமும் பிரமிப்பைத் தருகிறது. விடயங்களை புரிந்து கொள்ளும் திறனும் அதிகரிக்கிறது. மற்ற பெண் எலிகளுடன் ஒப்பிடும்போது இதன் செயல்வேகம் 3 மடங்கு அதிகமாக இருப்பது தெரியவந்துள்ளது.



இந்த அபூர்வ திறனுடைய எலி உருவாக்கத்தில் ஜோர்ஜியா மருத்துவக் கல்லூரியும் பங்கு கொண்டுள்ளது. ஏற்கனவே கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இதே ஜீன்களைக் கொண்டு அறிவுத்திறனை அதிகரிக்கும் சோதனை இதேகுழுவால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முடி நரைப்பது ஏன்?

நரைத்த முடி அறிவின் அடையாளம் என்பதெல்லாம் பொய் என்கிறது ஐரோப்பிய விஞ்ஞானிகள் குழு. கறுத்த முடி நரைத்துப் போவது ஏன் என்பதற்கும் இப்போது விடை காணப்பட்டுள்ளது.


நம்முடைய உரோம செல்களில் இயற்கையாகவே சிறிதளவு ஹைட்ரஜன் பெராக்சைடு என்னும் வேதிப்பொருள் சுரக்கிறது. வயது அதிகரிக்கும் போது இவ்வாறு சுரக்கப்படும் ஹைட்ரஜன் பெராக்சைடின் அளவும் அதிகரிக்கிறது. உரோமத்திற்குள்ளேயே ஏற்படும் இந்த மாற்றங்கள் முடியை சாம்பல் நிறத்திற்கு மாற்றி அதன் பிறகு வெள்ளையாக்கி விடுகிறது என்கிறார்கள் இந்த ஐரோப்பிய விஞ்ஞானிகள்.

உரோமத்திற்கு இயற்கையாகவே நிறமூட்டுவது மெலனின் என்னும் வேதிப்பொருளாகும். உரோமம், கண்கள், தோல், இவற்றின் நிறத்தை தீர்மானிப்பது இந்த மெலனின் தான். மெலனின் சுரப்பதை ஹைட்ரஜன் பெராக்சைடு தடைசெய்துவிடுவதுதான் பிரச்சினையின் மூலவேர்.

மனிதர்களின் உரோமக் கால்களின் மாதிரிகளை பகுப்பாய்வு செய்து இந்த முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. உரோமக்கால்களில் சுரக்கும் ஹைட்ரஜன் பெராக்சைடை தண்ணீராகவும், ஹைட்ரஜன் வாயுவாகவும் சிதைவடையச் செய்யும் பணியை *MSR A and B* என்னும் என்சைம்கள் செய்கின்றன. *MSR A and B* என்சைம்கள் சுரப்பது குறைவடையும் போது ஹைட்ரஜன் பெராக்சைடு சிதைவடைவதும் குறைந்துபோகிறது. ஹைட்ரஜன் பெராக்சைடு அதிகரிப்பதால் *tyrosinase* என்னும் என்சைம் உற்பத்தியாவதும் நின்று போய்விடுகிறது. மயிர்க்கால்களில் மெலனின் சுரப்பதற்கு இந்த *tyrosinase* எனப்படும் என்சைம்தான் காரணம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக பகிடி 'வதை'கள்



பல்வேறு எதிர்பார்ப்புகளை மனதில் சுமந்து கொண்டு, பல்கலைக்கழகம் நுழையும் மாணவர்கள் பகிடிவதைகளால் பாதிக்கப்படும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன.

பல்கலைக்கழகத்தினுள் நுழையும் மாணவர்களின் கூச்சத்தை நீக்கி, புதிய சூழலிற்கு பழக்கப்படுத்துவதற்கே பகிடிகள் மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், பின்னர் பகிடிகள் வதைகளாக மாறி மாணவர்களை அடிப்பதும், அருவருக்கத்தக்க வார்த்தைகளினால் ஏசுவதும், மாணவிகளுடன் தரக்குறைவாக நடப்பதும், மாணவர்களை அருவருக்கத்தக்க செயல்களில் ஈடுபடவைப்பதும் அரங்கேற்றப்பட்டுவருகின்றன.

குற்றம் புரிந்தவர்களிற்கு தண்டனைவழங்கும் பூசா, வெலிக்கடை, மகஸீன், போகம்பரை சிறைச்சாலைகளை விட மோசமான நிலையில் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் பகிடிவதைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

ஒரு போத்தலில் ஆண், பெண் இருபாலாரும் இணைந்து பானம் அருந்துவதில் ஆரம்பமான பல்கலைக்கழக பகிடிவதைகள் இன்று நிர்வாணமான முறையில் சக மாணவர்கள் முன்நிலையில் நடித்துக்காட்டும் நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

இலங்கையிலுள்ள 16 பல்கலைக்கழகங்களிலும் இந்தத் தொற்றுநோய் வேரூன்றியுள்ளது. வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதைகள் இடம்பெறுகின்றன.

பகிடிவதை தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 4 ஆம் ஆண்டு மாணவனொருவன் விளக்குகையில்; இங்கு பகிடிவதைகள் இடம்பெறமுக்கிய காரணம் அவர்களை சமூகத்திற்கு மத்தியில் பிரதிபலிப்பதற்கும், அம்மாணவனுக்குள்ள கூச்சம், அச்சநிலைகளை போக்குவதுமேயாகும்.

சிரேஷ்ட மாணவர்களுடன் சகஜமாகப் பழகும் நிலைமையை தோற்றுவிப்பதற்கான வழிமுறையாக பகிடிவதை உள்ளதென அவர் கூறினார்.

10 வருடத்திற்கு முன் பேராதனை பல்கலைக்கழகத்தில் பகிடிவதைக்குள்ளான மாணவனொருவன் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு உயிரிழந்த சம்பவத்துக்குப் பின்னர் மாணவர்கள் மத்தியில் பகிடிவதையை ஒழிக்கும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தும் தற்போது 'பகிடி' மறைக்கப்பட்டு, வதைகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற சிந்தையுடன் செயற்பட வேண்டிய மாணவர்கள் "யாம் பெற்ற துன்பம் பெறுக இவ்விளைய சமூகம்" என்ற நோக்குடன் முதல்வருட மாணவர்களுக்கு பகிடிவதை செய்கின்றனர்.

இவ்வாறு மாணவர்களால் வதைகளுக்குள்ளாக்கப்பட்டு, பல்கலைக்கழக வாழ்க்கையை வெறுத்துக் கொண்டு கல்வியைத் தொடரும் பேராதனைப் பல்கலைக்கழக 2 ஆம் வருட பொறியியல் பீட மாணவியொருவர் பகிடிவதையினால் தான் பெற்ற இன்னல்களை குறிப்பிடுகையில்;

உயர்கல்வியை மேற்கொள்ள பல்கலைக்கழகம் நுழைந்தேன். அங்கு சென்ற முதலாம் நாளே எனது உடையில் மாற்றங்களை ஏற்படுத்தும் படி கூறினர். வழமையாக அணியும் முறைக்கு மாற்றமாக சாதாரண ஆடைகளை அணிந்து பழைய செருப்புகளை போட்டுக்கொண்டு வருமாறும் கூறினர்.

பின்பு அவர்களின் தண்டனைக்குப் பயந்து உடையில் மாற்றங்களை செய்து சென்றேன். மீண்டும் என்னை அழைத்து எந்த வகையான உணவுகளை உட்கொள்கிறீர் என வினவியபின் பல்கலைக்கழகம் வந்தால் அனைத்தையும் பழகிக் கொள்ள வேண்டுமெனக் கூறி அசைவ உணவுகளை உண்ணவைத்தார்கள்.

விரத காலங்களில் இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டதுடன் பிறர் சாப்பிட்டதை வற்புறுத்தி சாப்பிட வைத்ததுடன், அதனை உட்கொள்ளாத நேரங்களில் வெவ்வேறான தண்டனைகளை அனுபவிக்க நேரிட்டது என்றார்.



பல்கலைக்கழகம் நுழையும் மாணவர்கள் அச்சமற்ற நிலையில் மாணவர்களுடன் சகஜமாக பழக வேண்டும் என்பதற்காக வக்கிரத் தன்மைகளை கொண்டு இளம் மாணவச் சமூகங்களை சித்திரவதைக்குட்படுத்துவது மட்டுமன்றி, பாலியல் சேஷ்டைகளையும் புரிகின்றனர்.

அண்மையில் பேராதனை பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்ட பதின்மூன்று மாணவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட மாணவன் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் பகிடிவதையின் கொடூரத்தை மீண்டுமொருமுறை வெளிப்படுத்தியது.

கொடூரமான முறையில் மேற்கொள்ளும் பகிடிவதையை நியாயப்படுத்துவதற்கு மாணவர்கள் இரு காரணங்களை கூறுகிறார்கள். ஒன்று, பகிடிவதை என்பது பல்கலைக்கழகங்களின் பாரம்பரியம். மற்றையது, தாங்கள் முதல்வருடம் அனுபவித்ததை சக மாணவர்களும் அனுபவிக்க வேண்டும் என்பதேயாகும்.

இக் கொடுமைக்கெதிராக பல ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை பாராளுமன்றத்தால் அமுல்படுத்தப்பட்ட பகிடிவதை எதிர்ப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் அண்மைக்காலமாக பகிடிவதைகள் ஏற்றுக் கொள்ள முடியாத வகையில் இடம்பெறுவதால் பகிடிவதை எதிர்ப்புச்சட்டத்தின் சரத்துக்களை கடைப்பிடிக்க வேண்டியிருப்பதாக உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஷ்வவர்ணபால தெரிவித்திருந்தும் அதனை நடைமுறைப்படுத்தாமை கவலைக்குரிய விடயமே.

பகிடிவதைகள் பல்கலைக்கழகத்திற்கே உரிய அம்சமெனும் போதிலும் அது பலரை பாதிக்கும் போது அவற்றை தவிர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இவ்விடயத்தை சட்டங்களால் கட்டுப்படுத்துவதை விட மாணவர்கள் தாமாக சிந்தித்து திருந்துவதே சிறப்பாக அமையும்.

எச்.ஹுஸ்னா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ் பெற்ற ஆசிரியர்கள்—1

ஆசிரியர் பணியாற்றிய எத்தனையோ பேர் உலகப் புகழ் பெற்றுள்ளனர். அவர்கள் எண்ணற்றவர்கள். அதில் ஒரு சிலரைப் பற்றி...

### அல்பர்ட் ஜன்ஸ்டின்

பொதுச் சார்புத்துவக் கோட்பாடு மற்றும் சிறப்பு சார்புத்துவக் கோட்பாடுகளைக் கண்டுபிடித்த அல்பர்ட் ஜன்ஸ்டின் ஆசிரியராகப் பணியாற்றியவர். ஒரு விஞ்ஞானியாகவும் சார்புத்துவக் கோட்பாடுகளைக் கண்டறிந்தவராகவும் மட்டுமே நமக்குத் தெரிந்த ஜன்ஸ்டின் ஆசிரியராகவும் ஜொலித்துள்ளார். 1909 ஆம் ஆண்டு சூரிச்சில் பேராசிரியராகத் தனது வாழ்க்கையைத் துவக்கிய ஜன்ஸ்டின், பல்வேறு நாட்டு பல்கலைக்கழகங்களின் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றினார். பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டே சார்புக் கோட்பாடுகள் பற்றி ஆய்வு நடத்தி வந்தார். அதன் விளைவாக 1905 இல் சார்புக் கோட்பாடு. 1916 பொது சார்புக் கோட்பாடு. 1962 இல் இயக்கம் பற்றிய பிரவ்னின் கோட்பாடு மீதான ஆய்வு. 1938 பௌதீகவியலின் பரிணாமம் எனப் பல்வேறு கோட்பாடுகளைக் கண்டறிந்து நூல்கள் வெளியிட்டார்.



விஞ்ஞானத்தைத் தவிர வேறு சில துறைகளிலும் ஜன்ஸ்டின் பல நூல்களை எழுதியுள்ளார். அதில், 1933 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட போர் ஏன்? என்ற நூல் மக்களிடையே பல்வேறு கேள்விகளை எழுப்பியது. 1921 ஆம் ஆண்டு சார்புக் கோட்பாட்டு கண்டுபிடிப்பிற்காக நோபல் பரிசைப் பெற்றார். ஜன்ஸ்டின். ஐரோப்பிய மற்றும் அமெரிக்க பல்கலைக்கழகங்கள் இவருக்கு அறிவியல், மருத்துவம், தத்துவத் துறைகளில் டாக்டர் பட்டமளித்து கௌரவித்தன.

## குறுக்கெழுத்துப்போட்டி - 06

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 |
| 6 | ■ | 7 | 8 | ■ | ■ |
| 9 | 10 | ■ | 11 | 12 | 13 |
| ■ | 14 | 15 | ■ | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | ■ | 22 |
| 23 | ■ | 24 | 25 | 26 | 27 |

**இடமிருந்து வலம்**

1. கமக்காரன் என்றும் சொல்லலாம்
5. மாதங்களில் ஒன்று
7. ‘அம்பு’டன் தொடர்புபட்டது
9. சக்தி (திரும்பியுள்ளது)
11. பொருத்தம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
14. முழக்கம் (திரும்பியுள்ளது)
16. மீன்பிடிக்க பயன்படுவது (திரும்பியுள்ளது)
18. படித்து வாங்குவது
24. அக்கறை (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. விஜயின் படம்
3. பூட்டுக்கு இது வேணும்
4. இது கூவும் (குழம்பியுள்ளது)
10. இது குட்டி போடும் என்பர் (குழம்பியுள்ளது)
12. சிரசு
13. இறந்தவர்களை நினைவு கூர்ந்து செய்யப்படுவது
15. துன்பம்
18. கணவன் என்றும் சொல்லலாம்
21. இல்லை என்பதன் எதிர்ச்சொல் (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப்போட்டி - 04 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. ஆதவன் | 1. ஆமை |
| 6. கடமை | 2. தடம் |
| 9. கோடை | 3. கவரிமான் |
| 11. ரிதம் | 5. வாடை |
| 15. மாமா | 13. மாதம் |
| 19. அன்னம் | 14. பணம் |
| 23. பசி | 17. கானம் |
| 25. காலை | 21. அலை |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**கி.ஹரிராம்**

**வியாபாரி மூலை, பருத்தித்துறை.**

### பாராட்டுப்பெறுவோர்

01. ஆர்.சுபாசினி
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

02. ப.தீபா
புத்தூர் வீதி, நீர்வேலி.

03. இ.விதுஷா
அச்சுவேலி.

04. சி.நிரோஜன்
கரவெட்டி.

05. திருமதி ம.உமாதர்சினி
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

உங்கள் விடைகளை
‘Saturday மெயில்’
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...




## உலகின் மிகப் பெரியவை

உலகில் மிகப் பெரிய விடயங்கள் பல உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.



உலகிலேயே மிகப்பெரிய மலை இமயமலை மிகப்பெரிய சிகரம் எவரெஸ்ட்.

உலகிலேயே மிகப்பெரிய நீர்வீழ்ச்சி நயாகரா.

உலகின் மிக நீளமான ரயில்வே பிளாட்பார்ம் இந்தியாவின் கரக்பூர் ரயில் நிலையம் இதன் நீளம் 2,732 அடி.

உலகிலேயே மிகப்பெரிய மசூதி சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கஸ் நகரில் உள்ளது.

உலகிலேயே மிகப் பெரிய யேசுகிறிஸ்துவின் சிலை பிரேஸில் நாட்டில் உள்ள ரியோடி ஜெனிரோ நகரில் அமைந்துள்ளது. இந்த சிலை 38 மீற்றர் உயரமும், 700 தொன் எடையும் கொண்டது.

உலகிலேயே பெண்களுக்கு வாக்குரிமை அளித்த முதல் நாடு நியூஸிலாந்து. 1893 ஆம் ஆண்டு தான் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

உலகிலேயே அதிக ஆண்டுகள் பிரதமராக இருந்தவர் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ.இவர் 1959 முதல் 1990 வரை வாக்குரிமை அளிக்கப்பட்டது.

உலகின் மிகப்பெரிய தேவாலயம் ஆபிரிக்காவில் உள்ள ஐவரி கோஸ்ட்டில் உள்ளது.

உலகில் மிகவும் நீளமான நெடுஞ்சாலை பான் அமெரிக்கன் நெடுஞ்சாலை. இதன் நீளம் 24,140 கி.மீ.

உலகின் முதல் குடியரசு நாடு ஒஸ்ரியா.

உலகின் மிகப்பெரிய தீவுக்கூட்டம் இந்தோனேஷியாவில் உள்ளது.

உலகின் மிகப்பெரிய தீவு கிரீன்லாந்து.

உலகின் மிகப்பெரிய பாலைவனம் சகாரா பாலைவனமாகும்.

உலகின் மிகப்பெரிய கண்டம் ஆசியா கண்டம்.

உலகின் மிகப்பெரிய சமுத்திரம் பசிபிக் மகா சமுத்திரம்.

உலகின் மிகப்பெரிய நதி நைல் நதியாகும்.

உலகிலேயே மிகப்பெரிய விமான நிலையம் தென் அரேபியாவின் ரியாத் பன்னாட்டு விமான நிலையமாகும்.

## விடுகதை

1. அச்சு இல்லாத சக்கரம்; அழகைக் கூட்டும் சக்கரம். அது என்ன?
2. அடித்தால் விலகாது; அணைத்தால் நிற்காது. அது என்ன?
3. அருகருகே இருந்தாலும் ஆயுள்வரை சேர்வதில்லை. அது என்ன?
4. ஐவர் வீட்டுக்கும் பொதுவாய் ஒரு முற்றம். அவர்கள் யார்?
5. சுற்றிச் சுற்றி வந்து சூட்டைப் போக்கினான். அவன் யார்?

1. வளையல் 2. தண்ணீர் 3.தண்டவாளம்
4. உள்ளங்கை 5. மின்விசிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய சுவை...

# கற்பனைக் களஞ்சியத்தின் அற்புதச் சொற்கோயில்

கி.மஞ்சுளா

சைவசமய வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் நால்வர் (ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்) பெருமக்கள். அவர்களின் திரு அவதாரத்தால்தான் சைவமும் தமிழும் ஒருசேரப்புத்தொளி பெற்றுதழைத்து வளர்ந்தது. அச்சான்றோர்களின் அளப்பரிய சாதனைகளைப் பின் வந்தவர்கள் நினைத்து நினைத்து உள்ளம் உருகி பக்திப் பாக்களைத் தந்த அந்நால்வரையும் தமது பாக்களாலேயே வழிபாடு செய்தனர்.

அப்படிப்பட்டவர்களுள் தலைமை சான்றவர் 'கற்பனைக் களஞ்சியம்' என்று போற்றப்படும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் கவிசார்வ பெருமா, கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள், நன்னெறி சிவப்பிரகாசர், துறைமங்கலம் சிவப்பிரகாசர் என்று பலவாறாக அழைக்கப்பட்டார். அந்நால்வருக்கும் அவர் எழுப்பிய கவிதைச் சொற்கோயில்தான் நால்வர் நான்மணி மாலை என்ற பக்திப் பனுவல்.

திருச்செந்தூர் நீரோட்டகயமக (உதடு ஒட்டாமல் பாடப்படும் ஒருவகை பாவகை) அந்தாதி திருவெங்கை உலா, திருவெங்கை அலங்காரம், நால்வர் நான்மணி மாலை, சிவப்பிரகாச விகாசம், தருக்கப் பரிபாஷை, சதமணிமாலை, வேதாந்த சூடாமணி, சிந்தாந்த சிகாமணி, பிரபுலிங்க லீலை, பழமலை அந்தாதி, பிட்சாடண நவமணி மாலை, கொச்சகக் கலிப்பா, பெரியநாயகி அம்மை கட்டளைக் கலித்துறை, சிவநாம மகிமை, இஷ்டலிங்க அபிஷேக மாலை, நெடுங்கழி நெடில், குறுங்கழி நெடில், நிரஞ்சன மாலை, கைத்தல மாலை, சோணசைல மாலை, சீகாளத்திப் புராணம், திருவெங்கைக் கோவை, நெஞ்சுவிடு தூது, சிவஞான பாலையர், திருக்கூவ புராணம் போன்ற பக்தி நூல்கள் இவர் இயற்றியதாக அறியக் கிடைக்கின்றன. இறைவனுக்கு, பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட வார்க்கப்பட்ட கற்பனை மிகுந்த அற்புதச் சொற்கோயில்கள் இவரது அனைத்துப் படைப்புகளும்.

நால்வர் நான்மணி மாலையில் சிவப்பிரகாசரின் கற்பனைச் சொல்லோவியங்கள் மிக அற்புதமானவை, நால்வர் பெருமக்களையும் நான்கு மணி (முத்து, பவளம், மரகதம், மாணிக்கம்) மாலைகளாக்கி நெஞ்சுருகிப் பாடியுள்ளார்.

சம்பந்தரை வெண்பாவிலும், அப்பரைக் கலித்துறையிலும், சுந்தரரை விருத்தப்பாவிலும், மாணிக்கவாசகரை அகவற்பாவிலும் போற்றிப் பரவுகிறார் சிவப்பிரகாசம்.

96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று நான்மணிமாலை, நால்வர் பெருமக்கள் மீது நான்மணி மாலை என்ற இலக்கணம் அமையப் பாடப்பட்டதால் இந்நூல் நால்வர் நான்மணி மாலை என்ற பெயர் பெற்றது.

முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்னும் நால்வகை மணிகளை முறையே கோர்க்கப்பட்ட மாலை போன்று வெண்பா கட்டளைக் கலித்துறை ஆசிரிய விருத்தம் ஆசிரியப்பா (அகவற்பா) என்னும் நால்வகைப் பாக்களை நிரலே நிறுத்தி அந்தாதித் தொடை இலக்கணம் பொருந்தப் பாடப்படுவதால் இது நான்மணிமாலை என்று வழங்கப்படுகிறது. இதில் நாற்பது செய்யுள்ளே இருக்க வேண்டுமென்ற வரைமுறையும் உள்ளது.

**வெண்பாக் கலித்துறை விருத்தம்**
**அகவல்**
**பின்பேசும் அந்தா தியினாற் பதுபெறின்**
**நன்மணி மாலை யாமென நவில்வர்**
**என்பது இலக்கண விளக்க நூற்பா.**

வாழ்க்கையில் நிகழ்ச்சி காரண, காரிய அமைப்புடையவை. இறையருள் வீழ்ச்சிக்கும் காரண, காரிய அமைப்பு உண்டு. இவைகளை உட்கிடையாகக் கொண்டு அமைக்கப்பெற்றதே அந்தாதித் தொடை என்பர்.

**'முந்திய மோனை முதலா முழுவதும் ஒவ்வாறு விட்டால் செந்தொடை நாம் பெறும்'**

என்பது யாப்பிலக்கணம். எதுகை, மோனை முதலிய தொடைகள் முழுவதும் ஒவ்வாறு வந்தால் அதற்குச் செந்தொடை என்று பெயர்.

சிவப்பிரகாசர், மாணிக்கவாசகப் பெருமானுக்கு அமைத்த ஆசிரியப்பாவில் மூன்று, நான்கு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் மோனை எதுகை விதிகளைக் கடந்தே பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வெண்பாவும்-முத்தும்**

வெண்பா, உத்தம இலக்கணம் உடையது, வெண்சீரே வருதல் வேண்டும். செப்பலோசை அமைய வேண்டும். சைவசமய உண்மைகளை நிலைநாட்ட முற்பட்டதே திருஞான சம்பந்தர் தேவாரம். ஒரு பொருள் இருக்கிறது என்பதை நிலைநாட்டவும் அதன் இலக்கணத்தை வரையறுக்கவும் முற்படுவது முற்காரியமாகக் கருதப்படும். உண்மையையும் இலக்கணத்தையும் 'செப்புதல்' என்ற அடிப்படையில் சைவ சமயத்தை நிலை நாட்டப் புகுந்த திருஞான சம்பந்தரை வெண்பாவால்-செப்பலோசையால் பாடிப்பரவியுள்ளார்.

முத்து எனப்படுவது கறையில்லாத மழைநீர். ஆவணி 'சுவாதியில் சிப்பியின் வயிற்றில் புகுந்து கட்டித்தன்மையான ஒரு பொருள் கறையற்ற தெய்வ நலம் ஒன்றே மனித குழந்தையாகி, தெய்வ அமுதமே உண்டு, தெய்வ [illegible] பேசியதால், முத்து, ஞானசம்பந்த [illegible]னுக்கு இணைப்புடையதாயிற்று. இறைவன், சம்பந்தருக்கு முத்துச் சிவிகையும் முத்துப் பந்தரும் அளித்தமை இதனால்தான்!

**கட்டளைக் கலித்துறையும்-பவளமும்**

**'கலி' என்ற சொல்லுக்குச்** 'செருக்கு' என்றும் 'மகிழ்ச்சி' என்றும் இரு பொருளுண்டு. முதற்சீரின் இறுதி அசையாகிய காய், இரண்டாம் சீரின் மூல அசையாகிய நிரையுடன் சேரும்போது, மெத்தென்று ஓடிவரும் அருவி, தடையாக உள்ள கல்லின் மேல் மோதி எழும்போது உண்டாகும் ஓசையைப் போல ஒலிக்கும். இதுவே துள்ளலோசை, செருக்கை நிலைநாட்ட இவ்வோசை பயன்படுத்தப்படும். இதற்கு மாறாக மகிழ்ச்சியால் தோன்றும் கலிப்பா வகைகளும் உண்டு. வாழ்க்கையில் உத்தம இலக்கணத்தோடு வாழ்ந்து, பேரின்ப வாழ்வை இவ்வுலக வாழ்விலேயே பெற்றும் பெறுமாறு அறிவுறுத்தியும் சமணர்களின் செருக்கை அடக்கியும் நின்ற நாவுக்கரசர் இலக்கண நெறியோடு அமைத்து கட்டளைக் கலித்துறையால் பாடப்பட்டுள்ளார்.

கடலினுள் இருந்தாலும் கடலின் தன்மையை ஏற்றுக்கொள்ளாது இருப்பதும், பழுத்தல் இன்றி காயாகவே நிற்றலும் பவளத்தின் இயல்புகள் இவ்வுலகில் இருந்தாலும் இவ்வுலகியல் நெறிக்கு அடிமைப்படாமல் இருந்து காட்டியவர் நாவுக்கரசர். காயின் தன்மை புளிப்பு. அது பழமாக மாறியபின் இனிக்கும். புளிப்புத் தன்மைத்தாகிய இம்மனித உடலிலேயே இனிப்புத் தன்மையை-பேரின்பத்தை ஏற்று இன்பம் துய்த்து வாழ்ந்த திருநாவுக்கரசர் காயாகவே நிற்கும் பவளத்தோடு இணைக்கப்பட்டார். செம்மைக்கு உதாரணமாக நிற்கும் பவளம் வாழ்வின் இலக்கணத்திற்கு உதாரணமாக நின்ற நாவுக்கரசருக்கு இணையாயிற்று.

**ஆசிரிய விருத்தமும்-மரகதமும்**

அகவலோசை, தழுவுவதாய் இனமென அமைந்த அமைப்புடையது இது. இறைவனை, நினைப்பற நினைத்து, அவன் மகிழடியிலேயே எத்தனை இடையூறுகள் வரினும் தளராது நின்ற மயிலின் தன்மை நம்பியாரூரரின் இயற்கை. ஆனால் நம்பியாரூரர் நம்போல் அவர்களும் வாழுமாறு எளிதில் இவ்வுலகம் போற்ற வாழ்ந்து காட்டிய செயல்களையும் மேற்கொண்டவராதலின் அவருக்கு 'விருத்தம்' அமைத்தார்.

மரகதமும் மாணிக்கமும் மலைபடு பொருள்கள். மலையில் கிடைக்கப்படுபவை ஆயினும், மரகதம் கல் வகையைச் சார்ந்தது, மாணிக்கம் நீர்ப்பொருள் (விஷம்) கட்டிபட்டதால் அமையும் வகையைச் சார்ந்தது. இயல்பிலேயே கற்புத்தன்மை அமைய நின்று உலகினர்க்கு ஒளிவூட்டிய நம்பியாரூரர் மரகத மணியைச் சாரும் நிலை பெற்றார்.

**அகவலும் மாணிக்கமும்**

ஞான நிலையை வெளிப்படுத்துவது மயில். மயிலின் ஓசையே அகவலோசை எனப்படும். நினைவின் முதிர்ச்சியே மயிலுக்கு உருவாக அமையும். தன்னை மறந்து பிறிதொன்றை நினைப்பற நினைந்து நிற்கும் நினைவின் தன்மையை வழியாகக் கொண்டு இறையருள் இன்பம் துய்த்த 'அறிவாற் சிவமாம்' மாணிக்கவாசகப் பெருமானை, அகவலோசையில் அமைத்துப் பாடினார் சிவப்பிரகாசர்.

நீர்த் தன்மையாயிருந்தும் தம்முடைய ஒழுக்கத்தி னால் மாணிக்கத் தன்மையைப் பெற்ற மாணிக்கவாசகரை மாணிக்கம் என்ற மணியைக் கொண்டு பாடியுள்ளார்.

இந்நூலைத் 'துதிநூல்' என்றும் 'புகழ்நூல்' என்றும் கொள்வர் பலர். ஆனால், சிவப்பிரகாச சுவாமிகள் இந்நூலை, 'ஓர் ஆராய்ச்சி' என்று கூறுகிறார். 'என்பாட்டுக்கு நீயும் அவனும் ஒப்பீர் எப்படியினுமே' என்ற வரிகளில் தம் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

வரலாறுகளில் காணப்படும் சிக்கல்கள், தத்துவ உண்மையில் கொள்ள வேண்டிய கருத்துகள் அறவழியும் அருள்வழியும் மோதும் கற்பனைக் களஞ்சியத்தின் அற்புதச் சொற்கோயில்நிலையில் எழுகின்ற மாறுபாடுகள் போன்றவற்றை எடுத்துக்கூறி விளக்கி சிக்கல்களை நீக்கியுள்ளார்.

கற்பனையும் உவமையும் உருவகமும் எதுகை மோனையும் அமையப்பாடி நால்வர் பெருமக்களான நான்கு சைவ மணிகளுக்கும் நான்கு சொற்கோயில்கள் கட்டியுள்ளார் சிவப்பிரகாசர். இந்நூலில் உள்ள 40 பாக்களில் ஒன்றிரண்டை மட்டும் படித்தால் போதாது. அனைத்துப் பாக்களையும் நிரல்பட படித்துச் சுவைக்க வேண்டும்! கற்பனைக் களஞ்சியத்தின் கவித்திறனுக்கு நால்வர் நான்மணி மாலை குன்றிலிட்ட விளக்காய் ஒளிர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்திரன் புதிய சாதனை படைக்கும் - ஐஸ்



வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த மிகச்சிறந்த பட வாய்ப்புகளில் ஒன்று எந்திரன் என்கிறார் ஐஸ்வர்யா ராய். தனது பிறந்தநாளையொட்டி பல்வேறு பத்திரிகை மற்றும் சேனல்களுக்கு தனித்தனியாகப் பேட்டியளித் துள்ளார் ஐஸ்வர்யா ராய். அதில் அவர் கூறியிருப்பதாவது, என்னுடைய அதிர்ஷ்டம் என்றுதான் கூற வேண்டும். எந்திரன், ராவண் இரண்டுமே எனக்கு மிக மிக முக்கியமான படங்கள். எந்திரன் விஞ்ஞானப் படம். ரஜினியின் ஜோடியாக நடித்துள்ளேன். மிக நீண்ட நாள் தள்ளிப் போய்க்கொண் டிருந்த விஷயம் நாங்கள் இருவரும் ஜோடியாக நடிப்பது. நடித்த பிறகுதான் ஏன் அப்படித் தள்ளிப்போனது என அடிக்கடி கேட்டுக் கொள்வேன். அபிஷேக் அடிக்கடி இப்படிச் சொல்வார் ஒரு நல்ல வாய்ப்பு அமைவதற்காகத்தான் தள்ளிப் போனதாக எடுத்துக் கொள் என்று. ரஜினி ஒரு மகத்தான கலைஞர். பெருந்தன்மையானவர். எனது சினிமா அனுப வத்தில் நான் எங்குமே அவரைப் போன்ற ஒரு கலைஞரைப் பார்த்ததில்லை. எந்திரன் புதிய சாதனை படைக்கும் என்பது இமயமலை உய ரமானது என்று சொல்வதைப் போல. ராவண் என் மனதுக்கு நெருக்கமான இன்னொரு படம். என்னை அறிமுகப்படுத்திய இயக்குநர் மணி ரத்னம். வாழ்க்கையில் மறக்க முடியாத படமாக ராவண் அமையும் என்ற நம்பிக்கை உள்ளது என்று கூறியுள்ளார்.



## கைவிட்ட விக்ரம் கைகொடுத்த அஜித்



யாவரும் நலம் என்ற படத்தை எடுத்த இயக்குநர் விக்ரம் குமாரும் நடிகர் விக்ர மும் இணைவதாக அறிவிக் கப்பட்டபடம் 24. ஆனால் இந்தப் படம் ஆரம்பிக்கும் முன்பே இயக்குனருக் கும் நடிகருக்கும் முட்டிக்கொண் டது. விளைவு படத்தையே கைவிடுகிறேன் என்று முறைத்துக் கொண்டு போய்விட்டார் இயக்குநர் விக்ரம் குமார். இன்னொரு பக்கம் இழுத்தடிப்புக் குப் பெயர் போன செல்வராகவனின் புதிய படத் தில் நடிக்க போய் விட்டார் சீயான். இதில் மாட்டிக் கொண்டவர் தயாரிப்பாளர் மோகன் நடராஜன் தான். என்ன செய்வது என்று யோசித்தவருக்கு சட்டென நினைவில் மின்னியவர் தல அஜித் தான். ஏற்கனவே இருவரும் ஆழ்வார் படத்தில் இணைந்தவர்கள்தான். ஆழ்வார் தந்த தோல் வியை சரிக்கட்டும் விதமாய் மீண்டும் ஒரு படம் நடித்துத் தருவதாக 'தல' உறுதியளித்திருந்தாராம் மோகன் நடராஜனுக்கு. அதை நினைவுபடுத்தி கால்ஷீட் கேட்கலாம் என அஜித்துக்கு போன் போட்டாராம். நினைவூட்டலுக்கு அவசியமே இல்லாமல் கால்ஷீட் கொடுக்க சம்ம தித்தாராம் அஜித். இப்போது 24 படம் புதிய தலைப்புடன் அஜித் நாயகனாக நடிக்க உரு வாகவிருக்கிறது.



## Saturday சினிமா



அவன் பெயர் தமிழரசி
ஜெய் - நந்தகி


## நான் ஆளான தாமரை...

பாக்யராஜ் தன் மகன் சாந்தனுவை வைத்து இயக்கி யிருக்கும் சித்து படத்தில் தமிழ் சினிமாவில் தற்போதைய எழுதப் படாத நியதிப்படி ஒரு ரீ-மிக்ஸ் பாடல் இடம்பெறுகின்றது. இது நம்ம ஆளு படத்தில் இடம்பெற்ற நான் ஆளான தாமரை... பாடல் தான் அந்த குத்தாட்ட கலக்கல் பாடல். இந்தப் பாடலை பாடி யிருப்பவர் பிரபல இயக்குநர் வெங்கட் பிரபு. இதுபோல இளைஞர்களுக்கு ஏற்ற வகை யில் ஆங்கில கலப்புடன் உருவா கியிருக்கும் இந்த பாடல் சித்து படத்தின் ஹைலைட்டாகவும், ரசிகர்களை குதூகலப்படுத்தும் பாடலாகவும் இருக்குமென்கிறார் டைரக்டரும் நடிகருமான பாக்ய ராஜ். இந்த படத்தில் இடம் பெறும் பூவே பூவே எனத் தொடங்கி தொடரும் பாடலை இசையமைப்பாளர் யுவன் ஷங் கர் ராஜா பாடியிருக்கிறார் என் பது இன்னொரு ஹைலைட்.

## த்ரிஷாவின் அம்மாவிடம் வாங்கிக் கட்டிய விவேக்



நடிகர் சங்கக் கண்ட னக் கூட்டத்தில் தனது ஆபாச பேச்சில விவேக் சொன்ன ஒரு விஷயம் த்ரிஷா குளியல் வீடியோ போட்டோ சமாச்சாரம். இந்த வீடியோ புகைப் படங்கள் வெளியாகி சில ஆண்டுகள் ஆகிவிட் டன. இவை அனைத்தும் போலியானவை என்பதை நிலைநாட்ட ரொம்ப கஷ்டப்பட்டு த்ரிஷாவும் அவரது அம்மாவும் பட்ட பாடு கொஞ்சமல்ல. ஆனால் விவேக்கோ, இந்தப் புகைப்படங்கள் அனைத்தும் உண்மையானவை என்ற அர்த்தத்திலேயே பேசினார். த்ரிஷா குளிக்கும்போது போட்டோ வீடியோ எடுத்து அதை பத்திரிகையில போடுறிங்களே குளிக்கும்போது ட்ரெஸ் இல்லாமத் தாண்டா குளிப்பாங்க...உங்கொக்கா குளிக்கிறப்ப நிர் வாணமா போட்டோ எடுத்துப் போடுறதுதானே என்ற அரிய தத்துவத்தைக் கக்கியிருந்தார். இது த்ரிஷாவை செம கடுப்பேற்றியுள்ளது. அதிலும் அவரது அம்மா உமா கிருஷ்ணன், கோபத்தின் உச்சிக்கே போய் விவேக்கை லெப்ட் ரைட் வாங்கிவிட்டாராம். ஏன்யா அந்த வீடியோ, போட்டோல இருக்கிறது த்ரிஷா இல்லன்னு நாங்களே கஷ்டப்பட்டு நிருபிச்சுட்டு வந்திருக்கோம். பொலிஸாரும் அதன் அடிப்படையில் சைபர் பிரிவு மூலமா நடவடிக்கை எல்லாம் எடுத் தாங்க. அதெல்லாம் தெரியலியா உனக்கு இப்ப எதுக்கு அவ குளியல் போட்டோ விவகா ரத்தை இழுத்துவிட்ட... நியா யமா? உன்மேலதான் மான நஷ்ட வழக்கு போடணும்... இனி த்ரிஷா நடிக்கிற படத்து லயே நீ இருக்கவே கூடாது... என்று அவர் விட்ட சவுண்டில் இவர் டர்ராகிப் போனாராம். இனி த்ரிஷா நடிக்கும் படங்க ளில் விவேக் இருக்க மாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மலையூர் மம்பட்டியான்
பிரசாந்த் - மீரா ஜஸ்மின்

# ரன்பீரை சுற்றும் கத்ரீனா



ஏற்கனவே ஒருவர் காதலித்து வரும் நடிகரை இன்னொரு நடிகை காதலிப்பதும், ஏற்கனவே காத லித்து வரும் நடிகையை இன் னொரு நடிகர் காதலிப்பதும் சினிமா உலகில் புதிதல்ல. அவ்வப்போது இப்படி காதல் விளையாட்டுகள் பற்றிய செய்தி பொலிவூட்டில் பரபரப்பை ஏற்படுத்துவது உண்டு. அந்த வரிசையில் இப்போ இணைந் திருப்பது ரன்பீர்-கத்ரீனா ஜோடி. ஆரம்பத் தில் சல்மான்கானுடன் உலா வந்த கத்ரீனா சமீப காலமாக ரன்பீரை சுற்றிச்சுற்றி வரு கிறாராம். ரன்பீர் இருக்கும் படப்பிடிப்பு இடத்தைத் தேடிப்பிடித்து வரும் கத்ரீனா அவருடன் ஊர்சுற்று வைபவத்தையும் தொடங்கியிருக்கிறார். இது ரன்பீரின் காதலி தீபிகாவுக்குப் பிடிக்கவில்லை. இதனால் ரன்பீரை கழற்றி விட்டுவிட் டாராம் தீபிகா. ஏற்கனவே ரன்பீருக்காக நிஹர் பண்ட்யா, யுவராஜ் சிங் உள்ளிட் டவர்களை வெட்டிவிட்டவர்தான் இந்த தீபிகா என்பது கொசுறுத் தகவல்.

# விலக்கப்பட்ட கார்த்தி



ரைடக்டர் கே.வி.ஆனந்த் இயக்கத்தில் உருவா கவிருந்த புதிய படத்தின் நாயகனாக நடிக்க பருத்தி வீரன் கார்த்தி ஒப்பந்தமாயிருந்தார். கதை விவாதம் நடந்து வந்த நிலையில் கதையில் நிறைய குறுக்கீடு கள் செய்த கார்த்தி தனது புகழுக்கு ஏற்ப காட்சிகள் உருவாக வேண்டும் என்று கேட்டாராம். இதனால் வெறுத்துப் போன ஆனந்த், கார்த்திக்குப் பதில் வேறு நாயகனைப் போடலாம் என்று முடிவுக்கு வந்து விட்டார். தற்போது அதிர்ஷ்டம் அடித்திருப்பது சிம் புவுக்கு. கதையே தெரிய வேண்டாம். கூப்பிடுறப்ப வர்றேன் என்று சொல்லி கால்ஷீட்டை அள்ளிக் கொடுத்து அசத்தி விட்டாராம் சிம்பு.


வேட்டைக்காரன்
விஜய்

# அஜித், விஜயுடன் மகதீரா போட்டி

தெலுங்கில் ராம்சரண் தேஜா-காஜல் அகர்வால் நடித்து சக்கை போடு போடும் மகதீரா படம் தமிழிலும் உருவாகி வரு கிறது. பூர்வஜென்மத்தில் நிறைவேறாத காதல் கதையம்சத்து டன் உருவாகியிருக்கும் இப்படத்தின் வில்லனாக தேவ் கில் நடித்துள்ளார். இவர்தான் விஜயின் சுறா படத்தில் வில்லனாக நடிக்கிறார். மகதீரா படத்தை தமிழிலும் உருவாக்கும் பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன. முதல் பாதி படம் கலகலப் பூட்டும் வகையில் தமிழில் மீண்டும் படமாக்கப்படுகிறது. பின் பாதி தெலுங்கில் இருந்து அப்படியே டப் செய்யப்படுகிறது. பொங்கலுக்கு வெளியிடும் திட்டத்துடன் இப்படத்தை வளர்த்து வருகிறார்களாம். அப்போ பொங்கலுக்கு விஜயின் வேட்டைக் காரன், அஜித்தின் அசல், கார்த்தியின் ஆயிரத்தில் ஒருவன் ஆகிய படங்களுடன் மகதீராவும் போட்டி போடப்போகிறது.

# சிம்புவுக்கு த்ரிஷா கொடுத்த பரிசு

த்ரிஷாவுக்கும் சிம்புவுக்கும் அப்படி இப்படின்னு வதந்திகள் பரவினாலும், நாங்க எப்போதும் நல்ல பிரண்ட்ஸ் என்கி றார்கள் இருவருமே. இந்த கிசு கிசுக்கள் எல்லாம் எங்க நட்பில் கோடாலி வீசி துண்டு போட முடியாது என்று தீர்க்கமாக நம்பும் இருவரும், ஊடகங்களுக்கு பயந்து ரகசிய சந்திப் புகளிலும் ஈடுபடுவதில்லை. எல்லாம் ஓப்பன்தான். லேட்டஸ்டாக த்ரிஷா கொடுத்த ஒரு பரிசு பற்றி தனது தோழர் களிடம் சொல்லி ஆனந்தப்பட்டாராம் சிம்பு. அப்படியென்ன பரிசு? விண்ணை தாண்டி வருவாயா படத்தின் க்ளைமாக் சுக்காக இருவரும் நியூயோர்க் போயி ருந்தார்கள் அல்லவா? அங்கிருந்து ஒரு பரிசு வாங்கி பரிசளித்தாராம் த்ரிஷா. என்னவாக இருக்கும் என்று ஆவலோடு பிரித்த சிம்புவுக்கு இன்ப அதிர்ச்சி, ஹொலிவுட் பாணியில் ஸ்கிரிப்ட் தயா ரிக்கும் சொஃப்ட்வேர்தான் அது.

# நயன் வேண்டாம்; அலறும் சல்மான், ரவி

வடக்கே தலையை காட்டு... தெற்கே தீயைமூட்டு... ங்கிற மாதிரி பரபரப்பா இயக்கிக் கொண்டிருக்கிறார் பிரபுதேவா. இந்தியில் வாண்டட் படத்தின் ஹிற்றைத் தொடர்ந்து சல்மான் கானை வைத்து மோஸ்ட் வாண்டட் இன்ற படத்தை இயக்கத் திட்டமிட்டிருக்கிறார். இதில் நயன்தாராவை சல்மானுக்கு ஜோடியாக் கிவிடவேண்டும் என்று ஆசைப்படுகின் றாராம்.

அப்படியே தமிழில் ஜெயம்ரவியை வைத்து ஒரு படத்தை இயக்கப்போகின் றாராம். இங்கேயும் நயன்தாராவை ரவிக்கு ஜோடியாக்கிவிடவேண்டுமென்று முடிவெடுத்துவிட்டாராம். அலாவுதீன் கண்ணுக்கு வேணும்னா பூதமேஃபிகரா தெரியலாம். அடுத்தவங்களுக்குத் தெரி யணுமா என்ன? "வேண்டாம் ஆளை விடுங்க என்று அலறுகிறார்களாம் சல்மான்கானும், ஜெயம் ரவியும். சல்மான் கேட்பது அசினை ஜெயம் ரவியோ, யாரை வேணும்னாலும் ஜோடியாக போடுங்க. ஆனால் நயன்தாரா வேண்டாம் என்கி றாராம். இதில் பயங்கர அப்செட்டாகியி ருக்கிறார் பிரபுதேவா. சல்மான்கானிடம் சண்டை போட முடியாது. ஆனால் ஜெயம் ரவி விசயத்தில் அப்படியல்ல நயன்தாரா தான் நாயகி இல்லையினா இந்தப் படமே வேண்டாம் என்று மிரட்டுகிறாராம். பேராண்மை வெற்றிக்குப் பிறகு ஜெயம் ரவியை கொண்டாடத் தயாராக இருக்கி றது தமிழகம். பிரபுதேவா இல்லை என் றாலும் நல்ல படத்தை தெரிவு பண்ண முடியும் எண்கிற அளவுக்கு போயிருக்கி றாராம் ரவி.


ஜக்குபாய்
சரத்குமார் - கிரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...




# ஹமீட் கர்சாய்

பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் நடைபெற்று முடிந்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் ஒருவாறாக இவ்வார முற்பகுதியில் உறுதியான நிலையில் உறுதியான நிலைப்பாட்டை அடைந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான முதலாம் கட்ட வாக்கெடுப்பில் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டிருந்தும் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாக கூறி இரண்டாம் கட்ட வாக்கெடுப்புக்கு உத்தரவிடப்பட்டது.

முதலாம் கட்ட தேர்தல் முடிவுகள் கிடைக்கப்பெற்ற நிலையில், அதன் மோசடிகள் வெளிநாட்டு அமைப்புகளினாலும் ஆப்கான் எதிர்க்கட்சியினராலும் வெளிக்கொணரப்பட்டது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினருக்கு ஆப்கான் தேர்தல் குறித்த முடிவுகளை வெளியிடுவதற்கு உயர் மட்ட அழுத்தங்கள் இருந்தது.

'இருந்தாலும் ஹமீட் கர்சாயின் பிரதான எதிர் வேட்பாளரான அப்துல்லா அப்துல்லாவின் முறைப்பாட்டைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட வாக்கெடுப்புக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

ஆனால், எதிர்பாராதவிதமாக அப்துல்லா அப்துல்லா தனது முறைப்பாட்டையும் வாபஸ் பெற்றதுடன் இரண்டாம் கட்ட வாக்கெடுப்பிலிருந்தும் விலகிக் கொண்டார்.

இந்த வாய்ப்பு சாதகமாக மாற ஹமீட் கர்சாய் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றமை குறித்து சர்வதேச நாடுகளிலும் ஐ.நா. சபையிலும் கர்சாய் விவகாரம் பரவலாகப் பேசப்பட்ட அதேவேளை, ஆப்கான் மீது சகல நாடுகளும் ஒரு பார்வையைச் செலுத்தியிருந்தன.

இந்நிலையில், மீண்டும் ஜனாதிபதியாக ஹமீட் கர்சாய் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், உலகின் சகல பகுதிகளிலிருந்தும் வாழ்த்துகள் வந்தவண்ணம் உள்ளன.

ஆப்கானிஸ்தானில் புதியதொரு அத்தியாயத்தை கர்சாய் ஆரம்பிக்க வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலைபேசி உரையாடல் மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளுடன் நெருங்கிய உறவைப் பேணி வரும் கர்சாய் அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்கு மேற்குலகின் கீழ் நடக்க வேண்டிய கடப்பாடும் உள்ளது.

ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரையில் அரச திணைக்களங்களில் காணப்படும் ஊழல் மோசடிகளை ஒழித்தல், தலிபான் பயங்கரவாதிகளை ஒழித்தல் ஆகிய இரண்டுமே பாரிய சவாலாக உள்ளது.

இவ்விரு முக்கிய பிரச்சினைகளுக்கும் அடுத்து வரும் 5 வருட கால பதவிக்காலத்தில் கர்சாய் தீர்வு காண வேண்டும்.

ஏற்கெனவே, 2004 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியாக இருந்துவரும் கர்சாயால் இதுவரை ஊழல், மோசடி, தலிபான்களின் தீவிரவாதம் ஆகியவற்றை குறிப்பிட்ட அளவில் கூட ஒழித்ததாகத் தெரியவில்லை.

தலிபான்களை ஒழிப்பதற்கான நடவடிக்கையில் சொந்த நாட்டுப் படைகள் மட்டுமன்றி, அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுத் துருப்புகளும் பயன்படுத்தப்பட்டும் இதுவரை தலிபான்களை ஒழித்ததாக இல்லை.

ஆப்கானில் நாளாந்தம் தலிபான்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றனர்.


அதேவேளை, சில சமயங்களில் ஜனாதிபதி கர்சாயை இலக்கு வைத்தும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில், இரண்டாவதும் இறுதியுமான ஜனாதிபதி பதவிக்காலத்தில் ஆப்கான் எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சினைகளுக்கு கர்சாய் எவ்வாறு தீர்வு காணப்போகின்றார் என்பதை அறிந்துகொள்ள ஆப்கான் மீது நாமும் ஒரு பார்வையை செலுத்துவோம்.

**யோ. நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூத்துக்கலை(ஞர்)



மீண்டுமொரு நாடகம்!
கலைஞரின் நெறியாள்கையில்,
தொடங்கின ஒத்திகைகள்.
காட்சிகள் களம் பிடித்தன.
கதாநாயகர்கள்
வில்லர்கள்
மோதத் தொடங்கினர்.
நம்மூர்ப் ‘பெரியவர்க்கோ’
நகைச்சுவைப்பாத்திரம்.
அசத்தத் தொடங்கினாரவர்.

அன்று,
புலரிப்போழ்தில்
குண்டுக்கட்டாய்
தூக்கிவீசினார் ‘அம்மா’.
இன்று,
செங்கம்பளம் விரித்து
வரவேற்புப்பாடுறார் ‘ஐயா’.
அன்பினாலா?
தகுதிகண்டா??
ஆற்றலை மெச்சியா???
பூரித்துப் போனோம் நாம்.
சோழியன் குடுமி
சும்மா ஆடாதென்றறிந்தும்.

காத்துள்ளார் பலர்.
ஆட்டம், போடவும் ஆட்டங்காணவும்
அழைப்பிற்காய்
காத்துள்ளார் பலர்.
அரங்கிற்காய்
தவம் கிடக்கும்
‘முள்ளந்தண்டிலிகள்’
வாழ்த்துப்பாடவும்
போற்றித்துதிக்கவும்
‘ஆய்வுகள்’ இடம்தரும்!

நடந்ததை மறந்து
கிடைத்த வேளையில்
நம் தலைக்கோர் மகுடத்தைத்
தேடிக்கொள்வதில்
தவறேதுமுண்டோ?

தமிழனென்று சொல்லுவோம்.
தலைநிமிர்தல் யாருக்கு வேண்டும்?

மீண்டுமொரு நாடகம்!
அன்னை தமிழுக்கு
செம்மொழி மகுடஞ்சூட்டி
அழகுசேர்த்து குதூகலிக்க
அடுத்த ஆண்டில் அரங்கேறும்
அன்னை தமிழோ
அச்சத்திலும்...
நாணத்திலும்... தான்
துகிலுரியப்படுவதையுணர்ந்து.

**துணைவியூர் கேசவன்**




## அகதியின் உயிர் கூடு



நேற்று பெய்த ஷெல் மழையில்
இடிந்து மடிந்தது கல்வீடு
இன்று பெய்த மெய் மழையில்
அடித்து அள்ளுண்டது....
அகதிக் கொட்டகைவீடு
நாளை பெய்யும் பொய் மழையே....?
காவிச் செல்வதற்கில்லை என
கலங்காதே.....!
அகதி அந்தஸ்தான உயிர் - கூடு
உணர்வின்றி தவித்தும் மனக்கூடும்
அழியாப் புகழுடன் உளதாய்
பூத்து... காத்திருக்கிறது...?

**அ.ஸ்ரீலக்ஷி, உடுப்பிட்டி.**

## காதல் நினைவகம்...

பெண்ணே
புத்தகத்
தைப் புரட்
டினால்
பக்கங்கள்
முழுவதும் -
உன்
வதனமும் நினைவும்
நிழலாகும் என்ற
பழைய கவிதை - நான்
எழுதத் தயாரில்லை
கணினியைத் திறந்தால் - உன்
நினைவுகளை மட்டுமல்ல
நிழலையும் - பல
சித்துவிளையாட்டாய்
பலவாறு சித்திரித்து
தனிமையில் இனிமை காணுகிறேன்
இதனால்
கணினியின் நினைவகம் - என்
நினைவகத்தை விட நிரம்பி இருக்கிறது.

**கபி, பருத்தித்துறை**

## பிரிவு

எதிர்பார்க்காத
நம் சந்திப்புகளால்...
எம் உயிரே இன்று வாடுகின்றது...

மொழி புரியாத
எண்ணற்ற பார்வைகளால்...
அன்பு வித்து கண்டது

பேசத் தெரியாத
எம் உள்ளங்களின் சிம்மாசனம்
கோதலால் ஊற்று உடைத்தது...

பிரிவுகள் பிரியாவிடையை கேட்டபோது
உன் விழிகளும்
என் விழிகளும்
கண்ணீரால் கலங்கியது...

நம் உணர்வுகள்
அலையாக எழுந்தது
உருவங்கள் நிழலாக...
மறைந்தது...

நாம் சந்தித்த சமவெளிகள்
என்றென்றும் சமன்பாட்டில்-நம்
காதல் காவியத்தை நினைவூட்டும்...

மறுபடியும் ஒரு சந்திப்பு
உதயமானால்...
என்றும் சந்திப்போம்
நண்பர்களாக...

**சா.ரமேஷ்குமார்,**
**மீசாலை கிழக்கு.**



## கண்ணீர் விடுவதா...?

நீ தான் உலகமென நம்பியிருந்த எனக்கு
இதுதான் உலகமென புரிய வைத்தாய்.
என் மனதில் ஏமாற்றத்தை விதைத்தவளே.
சொல்லித்தான் விடுவதில்லை காதல்
சொல்லாமலே வருவதே காதலென புரியாத உன்னோடு
எனை இணையாத விதிக்கு நன்றி சொல்வதா - இல்லை
ஆழமான அன்பைப் புரியாது தடுமாறும் உன் அறியா
மையை நினைத்து கண்ணீர் விடுவதா?

**வ.ச.செல்வராசா.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
‘Saturday மெயில்’
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய்... பில்...!

செல்லப் பிராணிகள் விற்பனைசெய்யும் கடையொன்றுக்குப் போனார் ஹிலாரி. அங்கு அழகான கிளியொன்றைப் பார்த்து விட்டு 'இந்தக் கிளி நன்றாகப் பேசுமா' என்று கடைக்காரரிடம் அவர் கேட்டார்.

'கிளி நன்றாகப் பேசும்?' என்று கடைக்காரர் பதில் சொன்னார். ஏனைய கிளிகளின் கூடுகளில் 500 டொலர் என்று விலை குறித்திருக்கிறீர்கள். ஆனால், இந்தக் கிளிக்கு 50 டொலர்கள் மாத்திரமே விலை போடப்பட்டிருக்கிறது. ஏன்? அப்படி? ஹிலாரி கேட்டார்.

இந்தக் கிளியை எவருமே விரும்புகிறார்கள் இல்லை. எவருமே வாங்கிச் செல்வதாக இல்லை. முன்னர் விபசார விடுதியொன்றில் இந்தக் கிளி வளர்க்கப்பட்டதால் அதன் பேச்சு பயங்கரமானதாக இருக்கிறது என்று சொன்னார் கடைக்காரர்.


நல்லது. எனக்கு இந்தக் கிளி தான் வேண்டும் என்று கேட்டு அதையே வாங்கிக் கொண்டு வெள்ளை மாளிகைக்கு எடுத்துச் சென்றார் ஹிலாரி.

வெள்ளைமாளிகையைப் பார்த்து விட்டு கிளி 'புதிய வீடு, புதிய மடம்' என்று சொன்னது.

பின்னர் அங்கே ஹிலாரியின் மகள் ஷெல்சியாவும் ஒரு நண்பியும் வந்தனர். அவர்களைப் பார்த்து விட்டுப் 'புதிய வீடு புதிய பரத்தைகள்' என்று கூறியது கிளி. ஷெல்சியாவுக்கு கோபம் வந்து விட்டது.

ஆனால், ஹிலாரி கிளியின் சரித்திரத்தைச் சொல்லி நிலைமையை விளக்கியதும் அமைதியாகப் போய்விட்டார் மகள்.

சில நிமிடங்கள் கழித்து அங்கே கிளின்டன் வந்தார். உடனே கிளி ஆரவாரத்துடன் 'ஹாய் பில்' என்றுசத்தமிட்டது.




# மரணச்சடங்கில் பெரும் கூட்டம்



தனது வழக்கறிஞரின் மரணச்சடங்கிற்கு சென்ற நபர் ஒருவர் அங்கு வந்திருந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்து போனார். அவ்வளவு பெரும் எண்ணிக்கையில் மரணச்சடங்கிற்கு மக்கள் வந்திருந்தார்கள்.

அங்கிருந்தவர்களிடம் இந்த நபர் இவரின் மரணச் சடங்கிற்கு இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் ஏன் வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார்.

'நாங்கள் எல்லோரும் அவரின் கட்சிக்காரர்கள்' என்று அவர்களிடமிருந்து பதில் வந்தது.

இறுதி மரியாதை செலுத்த வேண்டுமென்றா வந்திருக்கிறீர்கள் என்று நபர் கேட்க, அவர்களிடமிருந்து வந்த பதில் என்ன தெரியுமா?

இல்லை, இல்லை இறந்து விட்டாரென்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவே வந்திருக்கிறோம்.

# அல்கோரும் கிளின்டனும் பூனைக்குட்டிகளும்



அல் கோர் காலை வேளைகளில் நடைப்பயிற்சியில் ஈடுபடுவது வழக்கம். ஒரு நாள் அவர் நடைப்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது வீதியின் மூலையில் ஒரு சிறுவன் ஒரு பெட்டியுடன் உட்கார்ந்திருந்ததை அவர் கண்டார்.

அவனை அணுகிய அல்கோர் பையனே உனது பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று ஆவலுடன் வினவினார்.

பெட்டிக்குள் புதிய பூனைக்குட்டிகள் இருக்கின்றன என்று பதிலளித்தான் சிறுவன். ஆகா அப்படியா என்று வியந்த அல்கோர் என்னவகையான பூனைக் குட்டிகள் என்று கேட்டார். அவை டெமோகிரட்ஸ் (ஜனநாயக கட்சிக்காரர்கள்) என்று சிறுவன் பதிலிறுத்தான். அப்படியானால் இந்தப் பூனைக் குட்டிகள் கவர்ச்சிமிக்கவையாக இருக்கும் என்று கூறி விட்டு அல்கோர் நடைப் பயிற்சியைத் தொடர்ந்தார்.


சில நாட்கள் கழித்து கிளின்டனுடன் சேர்ந்து நடைப்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டு அதே வீதியால் வந்தார் அல்கோர். அதே பெட்டியுடன் அதே சிறுவனையும் அங்கே கண்டார்.

இருவரும் சிறுவனை அணுகினர். இந்தப் பெட்டிக்குள் இருக்கும் கவர்ச்சியான பூனைக் குட்டிகளைப் பாருங்கள் என்று கிளின்டனுக்குக் காட்டினார் அல்கோர்.

சிறுவனைப் பார்த்து 'எனது நண்பருக்கு இந்தப் பூனைக் குட்டிகள் என்னவகையானவை என்று கூறுங்கள் என்று அல்கோர் கேட்டார்.

அவன் சொன்னான் அவை றிபப்ளிக்கன்ஸ் (குடியரசுக் கட்சிகள்)

அன்று நான் கேட்ட போது பூனைக் குட்டிகளை டெமோகிரட்ஸ் என்றாயே. இன்று என்ன மாற்றிச் சொல்கிறாய் என்று அல்கோர் அவனைப் பார்த்துக் கேட்க, 'பூனைக் குட்டிகளின் கண்கள் இப்போது திறந்து விட்டன' என்று நையாண்டித்தனமாக அவன் பதில் சொன்னான்.



# சலூனுக்கு வந்த செனட்டர்கள்

வாஷிங்டனில் உள்ள பார்பர் சலூன் ஒன்றிற்குள் மதகுரு ஒருவர் சென்றார்.

முடியை வெட்டுவித்து சிகையலங்காரம் செய்த பின்னர் மதகுரு பார்பரிடம் 'எவ்வளவு கட்டணம்' என்று கேட்டார்.

'கட்டணம் இல்லை. உங்களுக்கு சிகையலங்காரம் செய்வதை கடவுளுக்குச் செய்யும் சேவையாக நான் கருதுகிறேன் என்று பார்பர் சொன்னார்.

மறுநாள் காலை சலூனுக்கு வந்தபோது வாயிற்கதவருகே 12 பிரார்த்தனைப் புத்தகங்களும் மதகுருவிடமிருந்து நன்றி தெரிவிக்கப்பட்ட குறிப்பும் இருந்ததை பார்பர் கண்டார்.

அன்றைய தினம் மாலை பொலிஸ் அதிகாரியொருவர் வந்து முடி வெட்டுவித்தார். அவரும் கட்டணம் எவ்வளவு என்று கேட்டபோது 'கட்டணம் இல்லை. உங்களுக்கு முடி வெட்டுவதை ஒரு சமூக சேவையாகக் கருதுகிறேன்' என்றார் பார்பர்.

மறுநாள் காலை சலூனுக்கு வந்தபோது சில பரிசுப் பொருட்களும் பொலிஸ் அதிகாரியிடமிருந்து நன்றி என்ற குறிப்பும் கதவருகே இருந்ததை பார்பர் கண்டார்.

அன்றைய தினம் மாலை ஒரு செனட்டர் சிகையலங்காரம் செய்ய சலூனுக்கு வந்தார். அலுவல் முடிந்ததும் அவரும் 'கட்டணம் எவ்வளவு' என்று [illegible] கேட்டார். 'கட்டணம் கிடையாது. உங்களுக்கு சிகையலங்காரம் செய்வதை நாட்டுக்குச் செய்யும் சேவையாகக் கருதுகிறேன்' என்று பார்பர் சொன்னார்.

மறுநாள் காலை பார்பர் வேலைக்கு வந்தபோது சலூனுக்கு முன்னால் 12 செனட்டர்கள் நின்றார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவம்



# தொற்றுநோய் அல்லாத நோய்களின் தாக்கத்திலிருந்து எம்மை பாதுகாக்க...

இன்று உலகளாவிய ரீதியில் நோக்குகையில் தொற்றுநோய் அல்லாத நோய்களின் தாக்கம் அதிகரித்துச் செல்வதனை உலக சுகாதார நிறுவனமும் உலக வங்கியும் சுட்டிக்காட்டுகின்றன.

நீரிழிவுநோய் இதயமற்றும் குருதிக்கலங்கள் சம்பந்தமான நோய்கள் புற்றுநோய், ஆஸ்மா போன்ற சுவாசம் சம்பந்தமான நோய்கள் மற்றும் உளநோய்கள் என பல நோய்களினை தொற்று நோய் அல்லாத நோய்களுக்குள் அடக்கலாம்.

உலகளாவிய நோய்ப் பளுவில் 47% மான பளு தொற்று நோய் அல்லாத நோய்களினால் ஏற்படுகின்றது. இது 2020 ஆம் ஆண்டுகளில்60 வீதமாக அதிகரிப்பதுடன் இடம்பெறப் போகும் இறப்புகளில் 75% இறப்புகளுக்கு காரணமாகப் போகின்றது என கணிப்பிடப் பட்டுள்ளது.எமது பிரச்சினை என்னவெனில் நாம் இதனை எவ்வாறு கையாளப்போகின்றோம் என்பதே.

ஏன் இந்த அதிகரிப்பு இதற்கான காரணங்கள் என்ன, இலங்கையில் இது எவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்தப்போகின்றது. இதன்பாதிப்பு இலங்கை முழுவதும் ஒரேமாதிரியானதா அல்லது பிரதேச ரீதியான வேறுபாடுகள் உள்ளனவா? இங்குள்ள சுகாதார வசதிகள் இப்பிரச்சினையை கையாளக்கூடிய வளங்களை கொண்டுள்ளதா? இல்லையெனில்எவ்வாறு நாம் அந்த வளங்களை உருவாக்கி அல்லது பெருக்கிக் கொள்ளலாம் என இன்னோரன்ன பல கேள்விகள் எழுவது தவிர்க்கமுடியாத ஒன்று.

இந்நோய்களின் அதிகரிப்பானது உலகளாவிய சமூக விஞ்ஞான வளர்ச்சி மாற்றங்களுடன் ஒத்த வாழ்க்கைமுறை மாற்றமாகும்.இன்றைய பரபரப்பான உலகில் அதிகரித்துவரும் மனித தேவைகளினாலும் நகரமயமாக்கப்பட்ட வாழ்க்கை முறையால் எம்மால் பாரம்பரியமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த பழக்கவழக்கங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

பொதுவாக நாம் உண்ணும் உணவு எமக்குத் தேவையான சக்தியையும் உடல்வளர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது.வாழ்க்கையில்நாம் 20-25 வயதினை எட்டும்போது உணவின் 90% இற்கு மேற்பட்ட பகுதி உடற்சக்தி வழங்கலுக்கே பயன்படுத்தப் படுகின்றது.

நாம் எமது சக்தி தேவைக்கு மேலதிகமாக உணவை உண்ணும்போது அவ்உணவானது உடலில் கொழுப்பாக மாற்றப்பட்டு சேமிக்கப்படுகின்றது. எனவே,அளவுக்கு அதிகமான உணவு உண்ணுதலுடன் நமது நாளாந்த சக்தி தேவையும் குறைவடைந்து வருகின்றது.ஏனெனில் நாம் உடல் இயக்கத்திற்கு குறைந்தளவு சந்தர்ப்பத்தை கொடுத்து வீட்டை விட்டு பக்கத்திலுள்ள இடத்திற்கு செல்வதற்கே சொகுசு வாகனங்களை பயன்படுத்துகின்றமையாகும்.

இதுமட்டுமல்லாது உணவை உள்ளெடுத்தவுடன் அதிகளவு சக்தியை கொடுக்கக்கூடிய அதிக இலகு இனிப்புச்சுவையுள்ள உணவுவகைகளான கேக்,ஐஸ்கிறீம்,சோடாவகைகள்,சுவையூட்டப்பட்ட பழச்சாறுகளையும் மற்றும் அதிக எண்ணெய் மற்றும் கொழுப்பு சத்துக்கொண்ட எண்ணெய் பட்டர்,சீஸ்,இறைச்சி என்பவற்றில் செய்யப்பட்ட உணவு வகைகளை அதிகம் விரும்பிச் சாப்பிடுதலும் அதிகரிக்கின்றது.பெரும்பாலான உணவகங்களில் இவ்வகையான உணவுப் பொருட்களே அதிகளவு கிடைக்கப்பெறுகின்றன.இவற்றின் சுவையும் கட்டுப்பாடற்ற அளவில் உண்பதை தூண்டுவதுடன் மீண்டும் மீண்டும் உண்ணத் தூண்டுகின்றது.இவற்றினை பெரும்பாலும் சிறுபிள்ளைகள் விரும்பி உண்ணுகின்றனர்.இதனால், தற்போது பலரும் இவ்வாறான நோய்களினால் இளம்வயதில் பாதிக்கப்படுகின்றனர்.

இளம்வயதினர் இவ்வாறான நோய்களினால் பாதிக்கப்படுகையில் அவர்களின் வேலைசெய்யும் ஆற்றல் குறைவடைவதுடன் இந்நோய்களினால் ஏற்படும் பக்கவிளைவுகளினால் இதயம், சிறுநீர் சம்பந்தமான நோய்களினால் பாதிக்கப்படுவதுடன் இறக்கவும் நேரிடுகின்றது.இன்று யாழ்ப்பாணத்தில் இவ்வாறான இளவயது மரணங்கள் ஏற்படுவதை அவதானிக்கமுடிகின்றது.கிட்டத்தட்ட இரண்டு மாதங்களின்முன்னரும் காவடிஎடுத்து இறக்கியவுடன் இயற்கை எய்தியமை போன்ற சந்தர்ப்பங்கள் நடைபெற்றன.பெரும்பாலும் இளம்சந்ததியினர் கொத்து ரொட்டி மேலதிக இரண்டு முட்டையுடன் ஒரு சிறிய போத்தல் கொக்கக்கோலா, பெப்சி என்பது சாதாரண இரவு உணவாக உட்கொள்ளமுற்படுகின்றனர்.முன்னைய நாட்டிலுள்ள இளைஞர்கள் சைக்கிளில் ஊரை வலம்வருவது வழக்கம்.தற்போது அவ் ஊர்வலமானது மோட்டார் சைக்கிள் மீதானதாகவோ அல்லது கார் மீதானதாகவோ மாறிவிட்டது.

இதனால்,அவர்களின் உண்ணும் உணவிற்கான சக்தி இழப்பானது குறைவடைகின்றது.மேலதிக கொழுப்புப் படிவானது இளம்வயதில் உயர்குருதி அமுக்கம் மற்றும் இதய சம்பந்தமான நோய்களுக்கு உட்படுவதுடன் இவ்வாறான நோய்களினால் இறக்கவேண்டியுள்ளது.எனவே,அளவுடன் நல்லதை உண்டு நோயற்றவர்களாக வாழ்வோமாக.

டாக்டர்
இ.சுரேந்திரகுமாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேய்கள் பலவிதம்... ஒவ்வொன்றும் ஒருவிதம்

மனுஷங்களைப் போல தான் பேய்களிலும் ஏகப்பட்ட குரூப்கள். சில வகைப் பேய்கள் மக்களோடு தான் இருக்கும். நள்ளிரவில் விசும்பல் சத்தம் கேட்பது, கட்டில் கிரீச்சிடுவது, யாரோ நடக்கிற மாதிரி கேட்பது இதெல்லாம் இந்த வகைப் பேய்களுடைய சமாச்சாரங்கள். தற்கொலை , விபத்து, கொலை என ஏடாகூடமாகச் செத்துப் போறவங்க தான் இந்த வகைப் பேய்கள். ரொம்ப உஷாரா இருங்க, இவை புத்திசாலிப் பேய்கள்.



சில பேய்கள் சும்மா சும்மா ஒரே மாதிரி செயல்களைச் செய்து கொண்டே இருக்கும். கொஞ்சம் முட்டாள் பேய் என்று சொல்லலாம். பாழடைந்த மண்டபங்களில் கதவு அசைவது, ஊஞ்சல் ஆடுவது இப்படி சொல்லிவைத்த மாதிரி ஒரே கதை சொல்றாங்கன்னா, நாயகன் இந்த வகைப் பேய்கள் தான்.

சில வகைப் பேய்கள் நினைவு நாள் பேய்கள். செத்துப் போன நாளைக் கொண்டாட மட்டும் ஆவியா பூமிக்கு வருமாம். மற்றப்படி சாதுவாக கல்லறைக்குள் தூங்கி விடும். ஆனால் ஒரே ஒரு நாள் வந்தாலும் கொஞ்சம் கெடுபிடியான பேயாகவே இருக்குமாம்.

சினிமாவில் வருவது போல, மனிதர்களைப் பிடித்து உள்ளே நுழையும் பேய்கள் இன்னொருவகை. மனிதனுக்குள் புகுந்து கொண்டு அதிகாரம் செய்யும், கொஞ்சம் ஆபத்தான பேய் இது.

'நிறைவேறாத ஆசைப் பேய்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள் மகனுக்கு கல்யாணம் பண்ணிப் பார்க்க ஆசைப்பட்டேன் என ஏக்கத்துடன் இறந்து போனவர்கள், அந்த மகனுக்கு திருமணம் நடக்கும் வரை ஆவியாகி சுற்றிச் சுற்றி வருவார்களாம்.

சிலவகைப் பேய்கள் தகவல் பேய்கள். நல்ல பேய்கள் பட்டியலில் வைக்க வேண்டிய பேய்கள் இவை. பெரும்பாலும் ஒரு குடும்பத்திலுள்ள மரணச் செய்தியை நெருங்கிய சொந்தக்காரர்களுக்குச் சொல்லும் செய்தியாளன் இது. சட்டென மனதில் ஏதோ தோன்ற ஊருக்கு போன் பண்ணினால், 'ஆமாப்பா இப்போ தான் தாத்தா போயிட்டார் என கிடைக்கும் புரியாத கதைகளின் நாயகன் இந்தப் பேய்தான்.

இன்னொரு வகை பேய் பாசக்கார பேய். சொந்தக்காரர்களைத் தேடி வரும். பார்த்துவிட்டுப் போய்விடும். பலவேளைகளில் அது வருவதே கூட யாருக்கும் தெரியாது. இறந்துபோன பிறகும் வீட்டிலுள்ளவர்களைக் காவல் காப்பவை இவை.

நல்ல பேய் இனத்தில் 'பாதுகாக்கும் ஏஞ்சல்ஸ், முக்கியமானவை. இவை ஒவ்வொருவருடைய தோளிலும் அமர்ந்திருந்து நம்மை பாதுகாக்குமாம். பல நேரங்களில் 'மயிரிழையில் தப்புவதெல்லாம் இந்த காவல் தேவதைகளின் புண்ணியத்தினால் தான்.

சில வகைப் பேய்களுக்கு தான் இறந்துபோனதே தெரியாது. உயிருடன் இருப்பதாகவே நினைத்துக்கொள்ளும். குறிப்பாக ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் வசிக்கும் வயதானவர்கள் கவனிக்க யாருமின்றி இறந்துபோனால் அவர்கள் ஆவியான பின்னும் மனிதர்களைப் போலவே வாழ்ந்துகொண்டே இருப்பார்களாம்.



# சர்ச்சையைக் கிளப்பியுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்களின் இணையத்தளம்

லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்களின் பத்திரிகையின் ஒன்-லைன் பதிப்பில் மாணவிகளின் படு கவர்ச்சிகரமான படங்கள் இடம்பெற்றது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

த டேப் எனப்படும் இந்த பல்கலைக்கழக மாணவர்களின் இணையத் தளத்தில் டேப் டாட்டி என்ற பெயரில் வெளியாகியுள்ள பக்கங்களில் இந்த மாணவிகள் கவர்ச்சி போஸ் தந்துள்ளனர்.

இதனால் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பெயர் கெட்டுப் போய்விட்டதாகப் பலரும் குரல் எழுப்பியுள்ளனர்.

ஆனால், இப்படிப் பேசப்படவேண்டும், விவாதங்கள் கிளம்ப வேண்டும் என்பதற்காக இப்படி அழகிகளுடன் படத்துடன் அந்த இணையத்தளத்தை உருவாக்கியதாக இந்த இணையத்தளத்தை உருவாக்கிய மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் கடும் விமர்சனங்களும் நெருக்கடிகளும் நிலவியதால் பெக்கி ஆடம்ஸ் என்ற மாணவியின் படு கவர்ச்சிகரமான படத்தை மட்டும் நீக்கியுள்ளனர். ஓரஞ்சு நிற நீச்சல் உடையில் இவர் இடம்பெற்றிருந்தார்.

இருப்பினும், ஹெய்தி என்ற இன்னொரு மாணவியின் படு கவர்ச்சிகரமான படத்துடன் அந்த இணையத்தளத்தில் பக்கம் ஏறியுள்ளது.

தற்போது இந்த இணையத்தளத்தில் எம்மலினா தாம்ப்செல் என்ற மாணவியின் கவர்ச்சிப் படமும் கெயஸ் என்ற மாணவியின் நீச்சல் உடைக் காட்சியும் இடம்பெற்றுள்ளன. கெயஸ் கல்லூரி வளாகப் புல்தரையில் படுத்துக்கிடப்பது போல அந்தக் காட்சி உள்ளது.

இணையத்தளத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான ஜோர்ஜ் ( 22 வயது ) டவுனிங் கல்லூரியில் 3 ஆம் ஆண்டு அரசியல் பட்டப் படிப்பு படித்து வருகிறார். இதுகுறித்து அவர் கூறுகையில்; இந்த இணையத்தளம் நிச்சயம் சர்ச்சையைக் கிளப்பும் என எங்களுக்குத் தெரியும். இருப்பினும் சூடான விவாதம் கிளம்பட்டுமே என்றுதான் இப்படிச் செய்தோம் என்றார்.

கவர்ச்சி மாணவிகளில் ஒருவரான எம்மலினா மிகப் பருமன் ஆனவர். இவர் அழகிப் போட்டியிலும் பங்கேற்றவர். ஆனால், மிகப் பருமனாக இருந்ததால் தோல்வியுற்றார். கவர்ச்சிகரமாக போஸ் கொடுக்க எந்த மாணவியும் தயக்கம் காட்டவில்லையாம். மாறாக உற்சாகமாக ஒத்துக்கொண்டார்களாம்.

இந்நிலையில், கேம்பிரிட்ஜ் மாணவர் சங்க மகளிர் பிரதிநிதி நதாலி ஸாரக், இந்தக் கவர்ச்சிப் படங்களை எடுத்து விடுமாறு கேட்டுக்கொண்டுள்ளாராம். இந்த ஆண்டு மே மாதம் இத்தளம் தொடங்கப்பட்டது. முதல் வாரத்திலேயே 80,000 ஹிட்கள் கிடைத்தனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுங்க வைக்கும் பனிமலை ராட்ஷசன்

அடுக்கடுக்கான வெள்ளிப் பனி மலைச்சிகரங்கள், பள்ளத்தாக்குகள் நிறைந்த இமயமலை தன்னுள் பல இரகசியங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. உலகின் மிக உயரமான எவரெஸ்ட்டில் ஏறி சாகசம் செய்ய பல்வேறு நாடுகளில் இருந்து வரும் மலையேற்ற வீரர்களிடம் இன்றளவும் லேசான கிலியை ஏற்படுத்தி வருகிறது அங்கு இருப்பதாகக் கூறப்படும் 'பனி மலை ராட்ஷசன்'.

கடுங்குளிர் நிலவும் உயர்ந்த பனிமலைச் சரிவுகளில் முடிகள் அடர்ந்த உடலுடன் ஆடையின்றி ராட்ஷச பனி மனிதன் உலாவுவதாக பலஆண்டுகளுக்கு முன்பே பீதி ஏற்பட்டது. திபெத்தியர்கள் இவனை 'யதி' என்று குறிப்பிட்டனர். ஆனாலும் இவனைப் பற்றி நம்பத் தகுந்த ஆதாரம் கிடைத்தது. 1925 இல் இங்கிலாந்தைச் சேர்ந்த மலையேற்ற குழுவினர் இமயமலையில் சாகச பயணம் மேற்கொண்டிருந்தனர். அப்போது ஆயிரம் அடி தொலைவில் இராட்சத உருவம் நிர்வாணமாக நடந்து செல்வதை கிரேக்க புகைப்படப்பிடிப்பாளர் தோம்பஸ் என்பவர் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். சக வீரர்களிடம் கூறினார். வெண்ணிற பனிப்படலத்துக்கு நடுவே கரிய நிறத்துடன் சென்ற உருவத்தை அனைவரும் தெளிவாகப் பார்த்தனர். புகைப்படம் எடுப்பதற்குள் சென்று விட்டது.

அசட்டு தைரியத்தில் தோம்பஸ் மட்டும் திரும்பவும் அதே இடத்துக்கு சென்றார். 15 காலடித் தடங்களைக் கண்டு பிடித்தார். மனித தடம் போல. ஆனால், விரல்கள் சற்று பெரிதாக இருந்தன. ஒரு புதருக்கு அருகில் மறைந்து போயிருந்தது. 'அதன் பெயர் கஞ்சன் ஜங்கா யதி' என்று அங்கிருந்த கிராமத்தினர் கூறினர். அதன் பிறகு இமயமலை பயணத்தின் போது பலரது கண்ணுக்கு யதி தென்பட்டுள்ளது.

யதியை பற்றி 1951 இல் முக்கிய தட(ய)ம் கிடைத்தது. இங்கிலாந்து மலையேற்ற வீரர்கள் எரிக் ஷிப்டன், மைக்கேல் ஆகியோர் திபெத், நேபாளம் இடைப்பட்ட பனிமலைச் சரிவில் சுமார் 20 ஆயிரம் அடி உயரத்தில் யதியின் காலடித் தடங்களை புகைப்படம் எடுத்தனர். ஒன்றரை அடி நீளம், ஒரு அடி அகலம். பார்த்து மிரண்டு போனார்கள். காலடி தெளிவாக பதிந்திருந்தது. சற்று முன்புதான் கடந்து சென்றிருப்பது போல தெரிந்தது. இருவரும் பின்தொடர்ந்து சென்றனர். ஒன்றரை கிலோ மீற்றர் போயிருப்பார்கள். கடினமான ஐஸ் பாறைகளுக்கு இடையே காலடி மறைந்து போயிருந்தது.

'லங்கூர் இன குரங்கு அல்லது சிகப்புக்கரடியாகக் கூட இருக்கலாம். சாதாரண அளவு காலடித்தடம் தான். சூரிய ஒளியில் பனி உருகி தடம் பெரியதாகியிருக்கும். புகைப்படம் எடுத்தவர்கள் கப்சா அடிக்கிறார்கள்' என்றனர் விஞ்ஞானிகள். ஆனால், எவரெஸ்ட் சிகரத்தை முதன் முதலில் தொட்ட எட்மண்ட் லாரி, டென்சிங் ஆகியோரும் 1953 இல் தாங்கள் சிகரத்தில் இருந்து இறங்கிவரும் வழியில் ராட்ஷச காலடித் தடங்களைப் பார்த்ததாகக் கூறியுள்ளனர். என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா நிறுவனம் 1960 இல் தனது சொந்த செலவில் எட்மண்ட் லாரி தலைமையில் ஒரு குழுவை அனுப்பியது. இருட்டிலும் படமெடுக்கும் இன்ஃப்ரா ரெட் கேமரா உட்பட நவீன கருவிகளுடன் 10 மாதம் இரவு, பகலாக சுற்றினர். இரண்டு தோல்கள் மட்டும் கிடைத்தன. அது நீலக்கரடியுடையது என தெரியவந்தது. இதையடுத்து 'பனி மனிதன் கட்டுக்கதை' என்று கூறினர்.

அந்தக் குழுவில் இருந்த டெஸ்மண்ட் டோகி என்பவர் 30 ஆண்டுகள் இமயமலையில் தங்கி ஆய்வு செய்தார். 'யதி' என அழைக்கப்படும் ராட்ஷச உருவம் திபெத்தில் வாழும் நீலக்கரடி அல்லது கிப்பன் எனப்படும் மனிதக்குரங்காக இருக்கலாம். இல்லாத பட்சத்தில் 'யதி'யாகக் கூட இருக்கலாம். நீண்ட நெடுங்காலமாக இமயமலை சரிவில் வசிக்கும் மக்கள் நம்புவதைப் போல 'யதி' என்ற பனி மனிதன் உண்மையாகவே இருக்கலாம். அது அதிக உயரம் கொண்ட பனிமலைகளில் வாழும் மனிதன் போன்ற விலங்காக இருக்கலாம்' என்று தெரிவித்தார்.

பனிமனிதன் உண்மையா, கற்பனையா? இந்த விவாதம் போல 'யதி' பீதியும் இன்றளவும் தொடர்கிறது.

**- இந்துமதி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காயமே இது மெய்யடா'



விளையாட்டுலகில் வீரர், வீராங்கனைகளுக்கு காயங்கள் ஏற்படுவது இயற்கைதான். இருப்பினும் அதைத் தவிர்க்க முயற்சிக்கலாம் அல்லவா? ஓயாது இடைவெளியின்றி போட்டிகளில் பங்கேற்பதால் காயங்கள் ஏற்பட்டு அவர்களது விளையாட்டு வாழ்க்கையே பாதிப்படைகிறது. இந்தியாவின் சகிர்கான், இங்கிலாந்தின் பிளின் டொப், பீற்றர்சன், அவுஸ்திரேலிய அணியின் பிரெட் லீ உள்ளிட்ட பல வீரர்கள் இதற்கு உதாரணம் உண்டு.

டெனிஸ் போன்ற போட்டிகளில் ஒரு வீரர் ஆண்டுக்கு இத்தனை தொடர்களில் பங்கேற்க வேண்டுமென்ற கட்டுப்பாடு உண்டு. அதுபோல கிரிக்கெட் போட்டிகளில் கிடையாதுதான். ஆனால், அந்தந்தக் கிரிக்கெட் சபைகளின் நெருக்கடியால் குறைவான இடைவெளியில் போட்டிகள் நடக்கும் விதத்தில் அட்டவணைகள் அமைக்கப்படுகின்றன.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் இலங்கை சென்று வந்த இந்திய அணி, நியூஸிலாந்துக்கு எதிரான தொடரில் பங்கேற்கச் சென்றது. தொடர் முடிந்து ஒருவார இடைவெளியில் வீரர்கள் தங்கள் வீடுகளுக்குக் கூடச் செல்ல நேரமில்லாமல் தென்னாபிரிக்காவில் நடந்த இந்தியாவின் இரண்டாவது ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கச் சென்றனர். விளைவு...? களத்தடுப்புச் செய்தபோது இந்தியாவின் சகிர்கான், சேவாக் போன்ற முன்னணி வீரர்கள் காயமடைந்தனர். இவர்கள் இல்லாமல் 'ருவெண்ரி-20' உலகக் கிண்ணத்தில் இந்திய அணி தோல்வியடைந்தது.

## அதிக ஆட்டம் ஆபத்தில் முடிகிறது

**மீளாத பிளின்டொப்:**

பின் இலங்கைத் தொடரின் காம்பிர், சமீபத்தில் தென்னாபிரிக்கத் தொடரின் போது யுவராஜ் என வீரர்கள் காயமடைவது தொடர்ந்தது. தற்போது அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் காம்பிருக்கு மீண்டும் காயமேற்பட்டது. இங்கிலாந்தின் பிளின்டொப், பீற்றர்சன் போன்ற முன்னணி வீரர்கள் கடந்த ஜூன் மாதம் காயமடைந்தவர்கள் தான். இன்னும் அவர்கள் குணமடைந்து மீண்டும் அணிக்குத் திரும்பவில்லை.

**பரிதாப ஆஸி:**

அதுபோல அவுஸ்திரேலிய அணியின் நிலைமை எல்லோரையும் விட பரிதாபம். கடந்த ஆறு மாதகாலமாக இந்த அணியினர் இன்னும் தங்கள் வீடுகளுக்கே செல்லாமல் தொடர்ந்து விளையாடுகின்றனர். இதனால் முன்னணி வீரர்கள் மைக்கேல் கிளார்க்க (தொடை பகுதி), நதன் பிராக்கன் (முழங்கால்), பெர்குசன் (முழங்கால்), பிராட் ஹாடின் (கை விரல்), ரிம் பெய்ன் (கை விரல்) ஜேம்ஸ் ஹோப்ஸ் (தொடை பகுதி), பீற்றர் சிடில் (கை விரல்) ஆகியோர் காயத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் ஜேம்ஸ் ஹோப்ஸுக்குப் பதிலாக களமிறங்கிய மற்றொரு அவுஸ்திரேலிய வீரர் ஹென்ரிக்ஸ் தொடைப் பகுதியில் காயமேற்பட இருவரும் நாடு திரும்பிவிட்டனர்.

**மீண்டும் சோகம்:**

அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ, காயம் காரணமாக நீண்ட ஓய்விலிருந்தார். மீண்டும் வந்த இவர் பல தொடர்களில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால், இந்தியாவுக்கு எதிரான தொடரில் மீண்டும் காயமேற்பட்டு நாடு திரும்பினார். அவுஸ்திரேலிய அணியில் தற்போது விளையாடும் வீரர்களை விட காயத்தினால் ஓய்வெடுப்பவர்கள் எண்ணிக்கை தான் அதிகமாயுள்ளது.



**நீல்சன் எதிர்ப்பு:**

இப்படி இடைவெளியின்றி கிரிக்கெட் விளையாடுவது தான் வீரர்கள் பாதிக்கப்படக் காரணம் என்கிறார்கள் கிரிக்கெட் வல்லுநர்கள். இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் நீல்சன் கூறுகையில்;

'ஐந்து போட்டிகள் கொண்ட தொடரென்றால் நன்றாக இருந்திருக்கும். ஆனால், ஏழு போட்டிகள் என்பது மிக நீண்ட தொடராக வுள்ளது. ஆனால், தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை, ஒப்பந்தக்காரர்கள் என எல்லோரையும் பார்க்க வேண்டியிருப்பதால் தொடர் நீளுகிறது. இதனால் வீரர்கள் தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்' என வெறுப்புடன் கூறினார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அடுத்து அட்டவணை தயார் செய்யும் போது வருமானத்தை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் வீரர்கள் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டும். அப்போது தான் சிறந்த வீரர்களின் போட்டியைக்காண தொடர்ந்து இரசிகர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். இல்லையேல் ஒவ்வொரு போட்டியிலும் சிறந்த வீரர்களின்றி அணிகள் விளையாடும் துர்ப்பாக்கிய நிலையேற்பட்டு விடலாம்.



# 17,000 ஓட்டங்களும் சச்சினும்



சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 17 ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற சிறப்பை இந்திய நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்று முன்தினம் பெற்றார்.

ஐதராபாத்தில் அவுஸ்திரேலியாவுடன் நேற்று முன்தினம் நடந்த 5 ஆவது ஒருநாள் போட்டியில் டெண்டுல்கர் 6 ஓட்டங்களில் இருந்தபோது, ஹில்பனாஸ் பந்துவீச்சில் 3 ஓட்டங்கள் ஓடி எடுத்து 9 ஓட்டங்களை தொட்டபோது, ஒருநாள் போட்டியில் 17 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல் கல்லையும் கடந்தார்.

20 ஆண்டுகளாக கிரிக்கெட் விளையாடி வரும் டெண்டுல்கர் ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்தவர் என்ற பெருமைக்குரியவர். அவருக்கு அடுத்து இலங்கையின் ஜெயசூர்யா 28 சதத்துடன் 13,377 ஓட்டங்களுடன் (441 போட்டி), 2 ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் 28 சதத்துடன் 12,286 ஓட்டங்களுடன் (329 போட்டி) 3 ஆவது இடத்திலுமுள்ளனர்.

இந்தப் போட்டியில் தனது 45 ஆவது சதத்தையும் நிறைவுசெய்த டெண்டுல்கர் ஒருநாள் போட்டியில் ஒவ்வொரு அணிகளுக்கு எதிராக குவித்த ஓட்டங்கள் விபரம் வருமாறு:

| அணி | போட்டி | ஓட்டங்கள் | அதிகபட்சம் | சதம் |
|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 66 | 2920 | 143 | 9 |
| பங்களாதேஷ் | 10 | 354 | 82* | 0 |
| பெர்முடா | 1 | 57 | 57* | 0 |
| இங்கிலாந்து | 36 | 1335 | 105* | 1 |
| அயர்லாந்து | 1 | 4 | 4 | 0 |
| கென்யா | 10 | 647 | 146 | 4 |
| நமீபியா | 1 | 152 | 152 | 1 |
| ஹொலன்ட் | 1 | 52- | 52 | 0 |
| நியூஸிலாந்து | 42 | 1750 | 185* | 5 |
| பாகிஸ்தான் | 67 | 2389 | 141 | 5 |
| தென்னாபிரிக்கா | 52 | 1655 | 122 | 3 |
| இலங்கை | 74 | 2749 | 138 | 8 |
| அரபு எமிரேட்ஸ் | 2 | 81 | 63 | 0 |
| மேற்கிந்தியா | 38 | 1571 | 141* | 4 |
| சிம்பாப்வே | 34 | 1377 | 146 | 5 |
| மொத்தம் | 435 | 17093 | 186* | 45 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நிஜத்துக்கு மாறியவர்

ஆந்ரே அகாசியின் 'ஒப்பன்' என்ற சுயசரிதை தான் டெனிஸ் அரங்கின் தற்போதைய பேச்சாக (ஹொட் டொபிக்) உள்ளது. இப் புத்தகத்தில் போட்டிகளின் போது ஊக்க மருந்து பயன்படுத்தியது. தனது கழுத்து வரை நீண்ட கூந்தல் நிஜம் அல்ல... வெறும் 'விக்' என்பது உள்ளிட்ட பல்வேறு இரகசியங்களை வெளிப்படையாகக் கூறி பரபரப்பு ஏற்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் அகாசி. 1990 களில் டெனிஸ் அரங்கில் கொடி கட்டிப் பறந்தார். 8 கிராண்ட்ஸ்லாம் பட்டம், ஒலிம்பிக்கில் தங்கம் வென்று உலகின் 'நம்பர்-1' வீரராக ஜொலித்தார். சிங்கத்தின் பிடரி போன்ற இவரது நீண்ட தலைமுடி தான் ரசிகர்களை அதிகமாகக் கவரும். நெற்றியில் ஒரு 'பொண்ட்' அணிந்து இவர் 'ஸ்டைலாக' ஆடும் ஆட்டத்தில் மயங்கிப் போன ரசிகைகள் ஏராளம்.

1997 இல் ஹொலிவூட் புருக் ஷீல்ட்சை மணந்தார். இவரை 1999 இல் விவாகரத்து செய்தார். பின்னர் 2001 இல் டெனிஸ் நட்சத்திரம் ஸ்ரெபி கிராபைக் கைப்பிடித்தார். இவர்களுக்கு இரு குழந்தைகள் உண்டு.

**ஊக்க மருந்து விவகாரம்**

2006 இல் டெனிஸிலிருந்து ஓய்வுபெற்ற அகாசி, தற்போது 'ஓப்பன்' என்ற பெயரில் தனது சுயசரிதையை வெளியிட்டுள்ளார். இது போன்ற புத்தகங்கள் பரபரப்பாக விற்பனையாக ஏதாவது அதிர்ச்சிச் சம்பவங்கள் இடம்பெறும். இதற்கு அகாசியும் விதிவிலக்கல்ல. தனது இளமைக் கால அனுபவங்கள் உட்பட பல்வேறு அந்தரங்க விடயங்களை மனம் திறந்துள்ளார். முதலில் ஊக்க மருந்து பயன்படுத்தியது தொடர்பான விடயம் அதிர்ச்சி ஏற்படுத்தியது.

1997 இல் நடந்த ஏ.டி.பி. போட்டிகளின் போது 'கிறிஸ்டல் மெத்தாம் பெடமைன்' என்ற தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பயன்படுத்தியுள்ளார். இது சோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு விளக்கமளித்த அகாசி; 'தான் குடித்த சோடாவில் ஊக்க மருந்து கலந்திருந்தது தெரியாது', என நிர்வாகிகளிடம் பொய் சொல்லி பிரச்சினையில் இருந்து தப்பியுள்ளார்.

**போலியான தலைமுடி**

அடுத்ததாகத் தனது தலைமுடி குறித்து ரகசியத்தை அம்பலப் படுத்தியுள்ளார். இவரது நீண்ட தலைமுடி திடீரென கொட்டத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் முன்பகுதியில் வழுக்கை விழுந்துள்ளது. இதனை மறைக்க 'விக்' வைக்கத் தொடங்கியுள்ளார். 1990 இல் நடந்த பிரெஞ்ச் ஓப்பன் இறுதியாட்டத்தின் போது இவருக்கு மிகப் பெரும் சோதனை ஏற்பட்டுள்ளது.

இப்போட்டி தொடங்குவதற்கு சில மணி நேரம் இருக்கும்போது சுத்தம் இல்லாத தண்ணீரில் தலையை அலச 'விக்' பிய்ந்து விட்டதாம். உடனே தனது சகோதரர் பில்லி உதவியுடன் தலையில் 20 'கிளப்கள்' மாட்டிக்கொண்டு களமிறங்கியுள்ளார். போட்டியில் அங்கும் இங்கும் வேகமாக ஓடினால்'விக்' கழன்று விடுமோ என்ற பயத்துடன் விளையாடியுள்ளார். இதனால் ஈக்குவடோரின் ஆன்ட்ரஸ் கோமசிடம் பரிதாபமாகத் தோற்றுள்ளார்.

இது குறித்து அகாசி தனது சுயசரிதையில் கூறுகையில்;

'ஒவ்வொரு நாளும் எழுந்திருக்கும் போது தலையணையில், 'வாஷ் பேசினில்', பாத்ரூமில்' எனது தலைமுடி உதிர்ந்து கிடந்தது. இதனைப் பார்த்து மனம் நொந்து போனேன். வழுக்கை விழ, 'விக்' வைக்க முடிவு செய்தேன். 1990 இல் பாரிஸில் நடந்த போட்டி மறக்க முடியாதது. தண்ணீர் பட்டதால் 'விக்' பிய்ந்து விட 'கிளிப்' மாட்டி களமிறங்கினேன். இப்போட்டியில் நான் வெற்றிபெற வேண்டுமென நினைக்கவில்லை. எனது 'விக்' கழன்று விடக்கூடாது என பிரார்த்தித்தேன். ஒவ்வொரு முறை பந்தை அடிக்கும் போதும் 'விக்' கீழே விழுந்து விடுமோ எனப் பயந்தேன். ஒருவேளை, கீழே விழுந்தால் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருப்பவர்கள், பத்திரிகையாளர்கள் எப்படி எல்லாம் வர்ணிப்பார்கள் எனப் பயந்தேன். இந்த பயத்தில் தான் தோல்வியடைந்தேன்.

பின்னர் புரு க்ஷீல்ட்ஸ் 'விக்'கிற்கு விடை கொடுக்கச் சொன்னார். அப்போது எனது பல் முழுவதையும் எடுத்துவிடுவதற்குச் சமமாக உணர்ந்தேன். சில நாட்கள் யோசித்தேன். எத்தனை வேதனைகள், எத்தனை பொய் சொல்ல வேண்டியுள்ளது. போதும் இந்தப் போலி வேடம் என முடிவுக்கு வந்தேன்.

மொட்டைத் தலைக்கு மாறினேன். கண்ணாடியைப் பார்த்த போது ஒரு புதிய மனிதர் காட்சியளித்தார். அன்று முதல் நிஜத்துக்கு மாறினேன்' எனத் தலைக்கு மேல் ஏற்பட்ட பிரச்சினையை உருக்கத்துடன் குறிப்பிட்டுள்ளார் அகாசி.



## அகாசி சிக்குவாரா?

'கிரிஸ்டல் மெத்' என்ற ஊக்கமருந்தை தான் எடுத்துக்கொள்ளும் வழக்கமிருந்ததாக அமெரிக்க டெனிஸ் நட்சத்திரம் ஆந்த்ரே அகாஸி ஒப்புக் கொண்டதையடுத்து தொழில்பூர்வ டெனிஸ் கூட்டமைப்பு (ஏ.டி.பி.) அவர் மீது விசாரணை நடத்த வேண்டுமென்று சர்வதேச ஊக்க மருந்து தடுப்பு ஆணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து உலக ஊக்க மருந்து தடுப்பு ஆணைய தலைமை இயக்குநர் ஹவ்மென் ஏ.டி.பி. யிற்கு கடிதம் எழுதியுள்ளார். எனினும், அவர் அந்தக் கடிதத்தில் உள்ள விபரங்களை விபரிக்கவில்லை.

''சுத்தமான, ஊக்கமருந்தற்ற விளையாட்டு வீரர்களை நாம் பாதுகாப்பது அவசியம். இப்போது நாம் நடவடிக்கை எடுக்கவில்லையெனில் நாளை ஒருவர் நம் அலுவலகக் கதவைத் தட்டி, அகாஸி விவகாரத்தில் உங்களால் என்ன செய்ய முடிந்தது என்று கேள்விகள் கேட்பார்கள்'' என்று கூறினார்.

இந்தக் கடிதம் ஏ.டி.பி. யிற்கு அனுப்பப்பட்டாலும் இதன் விபரங்கள் சர்வதேச டெனிஸ் கூட்டமைப்புக்கு தெரிவிக்கப்படும் என்று ஹவ்மென் கூறினார்.

ஊக்கமருந்து விதி மீறியிருப்பதாக உறுதியாகும் வரை ஏ.டி.பி. இது குறித்து கருத்தை வெளிப்படையாகக் கூறக்கூடாது என்பதை கொள்கையாகவே வைத்துள்ளனர். எனவே, பொறுத்திருந்து பார்க்க வேண்டுமென்று [illegible]வ்மென் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு ஆணையம் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அகாசி கிரிஸ்டல் மெத் எடுத்துக்கொண்ட ஆண்டு 1997. இதனால், ஊக்க மருந்து தடுப்பு ஆணையம் இந்த விடயத்தில் மூக்கை நுழைக்க முடியாது. ஏனெனில், ஊக்கமருந்து எடுத்துக்கொண்டு 8 ஆண்டுகளுக்குள்ளாக அவர் தண்டிக்கப்பட வேண்டுமென்பது விதி.

ஆனால், தற்போது ஊக்க மருந்து பிரச்சினையில்லை. அதை மறைக்க அகாஸி முயன்றார் என்பதே பிரச்சினையாகும். தடகள வீராங்கனை மரியன் ஜோன்ஸ் நடுவர் தீர்ப்பாயத்தை இதே விவகாரத்தில் பொய் கூறி திசை திருப்பியது நிரூபிக்கப்பட்டதால் 6 மாத காலம் சிறைத் தண்டனை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணச் சடங்கிற்கு வந்த மரணித்த நபர் அதிர்ச்சியில் உறைந்த உறவினர்கள்

## பிரேசிலில் சம்பவம்

**பிரேசிலியா:** கார் விபத்தில் உயிரிழந்ததாகக் கருதப்பட்ட நபர் ஒருவரின் மரணச் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த போது குறிப்பிட்ட அந்நபரே அவ் விடத்திற்கு உயிரோடு வந்தமை அனைவரையும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

பிரேசிலைச் சேர்ந்த அடேமிர் ஜோர்ஜ் கொன்கலேவ்ஸ் (வயது 59) என்பவரே இல்லாறு அலருக்கு இடம்பெற்ற மரணச் சடங்கின் போது அவ்விடத்திற்கு சென்று உறவினர்களை இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளார்.

தென்பிரேசிலின் பரானா மாகாணத்தில் கடந்த ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்ற கார் விபத்தொன்றில் இறந்த வேறு ஒருவரின் சடலத்தையே கொன்க லேவ்ஸின் உறவினர்கள் அல ரின் உடல் என தலறாக உறுதிப்ப டுத்தியுள்ளனர்.

இதனையடுத்து மறுநாள் திங்கட் கிழமை கொன்கலேவ்ஸின் மரணச் சடங்கு இடம்பெற்றது. இம் மரணச் சடங்கு இடம்பெற்றுக் கொண்டி ருந்த வேளையிலேயே கொன் கலேவ்ஸ் அவ்விடத்திற்கு வந் துள்ளார்.

இவ்விபத்து இடம்பெற்று அந்த இரலை கொன்கலேவ்ஸ் தனது நண்பர்களுடன் மது அருந்துவ தில் செலவிட்டுள்ளார். மறுநாள் அவரின் மரணச்சடங்கு இடம்பெற வுள்ளது தொடர்பாக அவர் அறிந்தி ருக்கவில்லையென அவரின் உற வினரொருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த விபத்தில் உயிரிழந்தவ ரின் உடல் அடையாளம் காண முடியாத வகையில் உருக்குலைந் திருந்ததாலும், கொன்கலேவ்ஸ் அணிந்திருந்தது போன்ற ஆடை யையே இறந்தவரும் அணிந்தி ருந்ததாலுமே இக் குழப்பமேற்பட் டுள்ளதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பின்னர் உயிரிழந்தவரின் சட லம் சரியாக இனங்காணப்பட்டு வேறொரு மாகாணத்தில் அடக் கம் செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி

## திரையிசைப் பாடல்களைக் கொண்ட ரிங்கிங் ரோன்களுக்கு தடை

மொஹாடிசு: சோமாலியாவில் கையடக்கத் தொலைபேசியின் ரிங்கிங் ரோனாக (அழைப்பு ஒலி) திரைப்பட இசை, பாடல் வரிகளைப் பயன்படுத்த அந்நாட்டு கிளர்ச்சி குழுவான அல் ஷபாப் தடை விதித்துள்ளது.

இதற்குப் பதிலாக குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆகிய வசன வரிகள் அடங்கிய ஒலிகளைப் பயன்படுத் துமாறு அவ் அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் அந்நாட் டில் நிறுவப்பட்டுள்ள இடைக்கால அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக அல்ஷபாப் போராடி வருகின்றது.

சோமாலியாவின் தென்பகுதி மற்றும் தலைநக ரான மொஹாடிசுவின் சில பகுதிகளையும் தன் வசம் வைத்துள்ள அல்ஷாபாப் இப்பிரதேசங்களில் ஷரீஆ சட்டங்களை மார்க்க அறிஞர்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை, திருமண வீடுகளில் நடனமாடுதல் மற்றும் பாலியல் திரைப்படங்களுக்கும் தமது கட்டுப் பாட்டுப் பிரதேசங்களில் தடைவிதித்துள்ளதோடு இஸ்லாத்திற்கெதிரான செயற்பாடுகளைத் தாங்கள் இனிமேலும் அனுமதிக்கப்போவதில்லையென்று அல் ஷபாப் அமைப்பின் பிரதிநிதியொருவர் தெரி வித்துள்ளார்.



ஜப்பானின் நகனோ நகரில் நடைபெற்ற சர்வதேச சாகசப் போட்டியொன்றில் அமெரிக்க ஜோடியொன்று பங்குபற்றியிருப்பதைக் காண்கிறீர்கள்.

## ஈரானின் தலைநகரை மாற்றத் திட்டம்

**தெஹ்ரான்:** ஈரான் தலைநகரான தெஹ் ரான் அடிக்கடி பூகம்பத்தால் பாதிக்கப்படுவதால் வேறோர் இடத்தை தலைநகராகத் தெரிவு செய்ய அந்நாட்டு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தெஹ்ரான் மிக மோசமான பூகம்பப் பகுதியில் அமைந்துள்ளதால் இப்பகுதி அதிகளவில் பாதிக் கப்படுமென சர்வதேச புவியியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளதையடுத்தே இத்தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

புதிய தலைநகரைத் தெரிவு செய்யும் இவ்வா லோசனையை அந்நாட்டு அதியுயர் மதத் தலை வர் அயதொல்லா அலி ஹாமெனி முன்வைத்தி ருந்தார்.

தற்போது தெஹ்ரானில் 1.2 கோடி மக்கள் வசிக் கின்றனர். இந்நகர் தலைநகரெனும் அந்தஸ்தை இழக்கும் பட்சத்தில் இங்கு வசிப்பவர்கள் தொகை குறைவடையுமெனவும் இதனால் உயிர்ப் பலிக ளைக் குறைக்க முடியுமெனவும் கருதப்படுகின் றது.

கடந்த 2003 ஆம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்தில் 40 ஆயிரம் பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்க தாகும்.

ஈரானின் அரசியல் சமூக வரலாற்றில் இஸ்ப கான், கஸ்வான், ஷிராஸ் மஷ்ஷத் மற்றும் ஹமே டான் ஆகிய நகரங்கள் தலைநகரங்களாக இருந்து வந்துள்ளன.

## அமெரிக்காவின் தீவிரவாத கண்காணிப்பு பட்டியலில் 4 இலட்சம் பெயர்கள்

**வாஷிங்டன்:** அமெரிக்காவின் தீவிரவாதிகள் கண்காணிப் புப் பட்டியலில் 4 இலட்சம் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, அமெரிக்கப் புலனாய்வு அமைப்புகளான சி.ஐ.ஏ. மற்றும் எப்.பி.ஐ. ஆகியன கடந்த ஒரு வருட காலத்தில் மட்டும் தினந்தோறும் சுமார் 1600 பெயர்களை இப்பட் டியலில் இணைத்துள்ளதாக வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இவர்களை உளவுப்பிரிவினர் தீவிரமாக கண்காணித்து வருவதுடன், உரிய விசாரணைகளின் பின் தினந்தோறும் சுமார் 600 பெயர்கள் இப்பட்டியலிலிருந்து நீங்கப்பட்டும் வருகின்றன.

இப்பட்டியலில் உள்ளவர்களில் 5 சதவீதமானவர்கள் மட் டுமே அமெரிக்காவில் வசிக்கின்றனர். ஏனையோர் பிறநாடு களிலேயே வசிக்கின்றனர்.

## மயானங்களிலும் இடப்பற்றாக்குறை; டபிள் டெக்கர் முறை அறிமுகம்

**லண்டன்:** லண்டனிலுள்ள மயானங் களில் நிலவும் இடப்பற்றாக்குறை காரணமாக அங்குள்ள பழைய கல்லறை களையே மீளப்பயன்படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

பல இலட்சக்கணக்கான மக்கள் வாழும் இந்நகரின் மயானங்களில் இடப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள னர்.

இவ்விடப் பற்றாக்குறை காரணமாகத் தற்போது அங்குள்ள கல்லறைகளில் ஏற் கனவே புதைக்கப்பட்டுள்ள பிரேத பெட் டிகளைத் தோண்டி எடுத்து அவற்றை ஆழமாகப் புதைத்துவிட்டு அதன் மேல் வேறொரு பிரேதப் பெட்டியைப் புதைக் கும் முறை நடைமுறைப்படுத்தப்படுகின் றது.


அந்நகர மக்கள் அவர்களது தேசிய பாரம்பரியம் மற்றும் விதிமுறைகள் காரணமாக 'டபிள் டெக்கர் கல்லறை முறை' எனப்படும் இப்புதிய வழக்கத்தை விரும்பாது எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, பழைய கல்லறையை மீண்டும் பயன்படுத்தும் இம்முறை பிரிட்டனில் சட்டவிரோதச் செயலாகவே கடந்த ஆண்டு வரை காணப்பட்டது. கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சட்ட திருத்தத்தின் பின்னரே இம்முறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் நாவாந்துறைப் படிப்பகம்

# கிரிக்கெட் விளையாடாதே!



**வா**கனப்போக்குவரத்தும் சனசந்தடியும் மிகுந்த வீதிகளில் சிறுவர்கள் மாத்திரமல்ல, நடுத்தர வயதுவந்தவர்கள் கூட கிரிக்கெட் விளையாடுவது என்பது எமது நாட்டில் சர்வசாதாரணம். மக்களுக்கு ஏற்படக் கூடிய இடைஞ்சல்களைப் பற்றியெல்லாம் இந்த விளையாட்டு வீரர்களுக்கு அக்கறை கிஞ்சித்தும் கிடையாது. பொலிஸார் அதைப் பொருட்படுத்துவதும் இல்லை.

நாம் என்னசெய்வது என்று சலித்துவிட்டு மக்களும் தங்கள் பாட்டில் அலுவலை பார்க்கப் பழகி விட்டார்கள். வீதி கிரிக்கெட் விளையாட்டைத் தடை செய்ய வேண்டும் என்று இலங்கையில் எவருமே கோரிக்கை விடுத்ததாக நாம் இது வரை அறியவில்லை.

ஆனால், சென்னை மெரீனா கடற்கரையில் கிரிக்கெட் விளையாடுவதற்கு தடைவிதிக்க வேண்டுமென்று அங்கு நடைப் பயிற்சியிலும் வேறு பொழுதுபோக்குகளிலும் ஈடுபடுவோர் விடுத்த கோரிக்கையை சென்னை மாநகராட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது.

கடந்த சில தினங்களாக சென்னையில் இந்த விவகாரம் தொடர்பாக ஒரு பெரும் சர்ச்சையே மூண்டிருந்தது. கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தவர்களை பொலிஸார் கலைத்துவிரட்டியதை ஆட்சேபித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மெரீனா கடற்கரையில் சுமார் 2000 பேர் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

62 இலட்சம் சனத்தொகை கொண்ட சென்னை மாநகரில் எங்குபார்த்தாலும் சட்டங்கள் எழும்பிக்கொண்டிருக்கின்றன. வாகனப் போக்குவரத்து நெரிசலை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. அதனால் நகரில் குறிப்பாக கரையோரத்தை அண்டிய பகுதிகளில் உள்ள சிறுவர்களும் இளைஞர்களும் கிரிக்கெட் விளையாட்டுக்காக மெரீனாவையே நாடுவர். இது இன்று நேற்று வந்த பழக்கமல்ல. நீண்டகாலமாகவே மெரீனாவில் கிரிக்கெட் விளையாட்டு நடைபெற்றே வருகிறது.

ஆனால், அண்மையில் உடற்பயிற்சியிலும் நடைப்பயிற்சியிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்த சில பெரியவர்கள் மீது 'பந்து' பட்டுவிட்டது போலும் அவர்கள் செய்த முறைப்பாட்டையடுத்தே பொலிஸார் கிரிக்கெட் விளையாடியவர்களை கலைத்தனர். இதை ஆட்சேபித்தவர்கள் கடற்கரையில் விளையாடுவதற்கு அனுமதியில்லையென்றால் சிறுவர்களும் இளைஞர்களும் எங்கே போவது? இது என்ன கொடுமை என்று கேள்வி எழுப்பினர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக பத்திரிகைகளும் கூட பிரச்சினை கிளப்பி கிரிக்கெட் விளையாடுவோருக்கு கருணை காட்டுமாறு கேட்டுக்கொண்டனர்.

இதையடுத்து தமிழக அரசின் பிரதம செயலாளர், நகர பொலிஸ் ஆணையாளர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையாளர் சந்தித்துப் பேசி மெரீனாவில் கிரிக்கெட் விளையாடுவதற்கு தடை விதிப்பதென்றும் சென்னை மாநகராட்சியின் 10 வலயங்களில் உள்ள 228 விளையாட்டு மைதானங்களை கிரிக்கெட் விளையாட்டுக்குப் பயன்படுத்தலாம் என்றும் தீர்மானித்ததாக செய்திகள் வந்திருக்கின்றன.

திருவல்லிக்கேணி போன்ற மெரீனாவை அடுத்த பகுதிகளில் உள்ளவர்கள் இந்தத் தடை விதிப்புக்கு கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மெரீனாவை தங்களது உடற்பயிற்சிக்கும் நடைப்பயிற்சிக்கும் மற்றும் பொழுதுபோக்குகளுக்கும் பயன்படுத்துபவர்களுக்கு இருக்கின்ற உரிமையைப் போன்றே கிரிக்கெட் விளையாடும் இளசுகளுக்கும் உரிமை இருக்கிறது என்பது இவர்களின் வாதம்.

53 வயதான டி.ஜே.ரமணி என்பவர் கடந்த 30 வருடங்களாக மெரீனா கடற்கரையில் கிரிக்கெட் விளையாடி வருவதாகவும் தற்போது விதிக்கப்பட்டிருக்கும் தடையினால் ஒரு 'பாரம்பரியமே' தகர்க்கப்பட்டிருப்பதைப் போன்று உணருவதாகவும் 'இந்து' பத்திரிகைக்கு தெரிவித்திருக்கிறார்.

பொதுமக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துகிற விடயங்கள் தடை செய்யப்படும் போது அதற்காக யாரும் ஆட்சேபம் தெரிவிப்பதில்லை. ஆனால் மெரீனா கடற்கரை கிரிக்கெட் விளையாட்டுத் தடைக்கு பலத்த ஆட்சேபம் கிளம்பியிருக்கின்றது. கிரிக்கெட் பித்தர்கள் நிறைந்த நாட்டில் இளசுகளின் கிரிக்கெட் விளையாட்டை மெரீனாவில் தடைசெய்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று பலர் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

தினமணி பத்திரிகையின் கடந்த புதன்கிழமைய ஆசிரியர் தலையங்கத்தின் இறுதி இரு பந்திகளையும் உங்கள் கவனத்திற்கு தருகிறோம்

'எங்கேதான் போவது. செலவில்லாமல் கடலோரம் கிரிக்கெட் விளையாடுவதைக் கூடத் தடை செய்தால் வேறு என்ன விளையாட்டை விளையாடுவது? விளையாடுபவர்களை விளையாடாதே என்று சொல்லுவது இவர்களுக்கு விளையாட்டாக இருக்கிறது.

விளையாட்டு வெறும் பொழுதுபோக்கு அல்லது உடல் ஆரோக்கியம் மட்டுமல்ல. மன இறுக்கத்தைத் தளர்த்தும் ஒரே வழியும் விளையாட்டுத்தான். மாலை முழுவதும் விளையாட்டு என வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா' என்கிறார் மகாகவி பாரதி. கட்டணம் செலுத்தாமல், காவல்துறை தலையீடு இல்லாமல் விளையாட ஓர் இடமும் இல்லை என்றால் மாநகரம் வெறும் மா-நரகம்!



இப்பத்திரிகை நொதேர்ன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி 336ஆம் இலக்கத்தில் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org